
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
குருவே துணை
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •
மாணிக்கவாசகர்

# வேதாத்திரியப் பார்வையில்
# திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து

அருள்நிதி
மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

1.பிரார்த்தனை செய்வது எப்படி?
2.அலர்ந்து போனேன் அருள்செய்யாய்
3.கடுவினையைக் களைந்து விடலாமா?
4.பிரார்த்தனைக்குப் பலன் உண்டா?
5.எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்!
6.தன்முனைப்பு நீங்க தவம் ஒன்றே வழி.
7.இறைநிலையை உணரக்கூடிய பேரறிவுதான் பிரம்மஞானம்
8.பிரார்த்தனை வலிமை வாய்ந்தது.
9.மனம் ஒரு வியப்புக்குரிய இயக்கம்
10.இறைநிலை இன்பம்
11.உருகிப் பெருகும் உள்ளத்தைத் தா
12.ஆனந்தமாய் வாழ ஆசையா?

# பிரார்த்தனை

**பிரார்த்தனை** என்பது ஒரு வேண்டுகோள் அல்லது செயலாகும்.

இது வழிபாட்டு இலக்குடன் தொடர்பு கொண்டு ஒரு பரஸ்பர நம்பிக்கை மற்றும் புரிதலை செயல்படுத்த முற்படுகிறது.

பிரார்த்தனை என்பது மத நடைமுறையின் ஒரு வடிவமாக இருக்க முடியும்.

இது பொது அல்லது தனிப்பட்ட முறையில் நடக்கலாம். இது வார்த்தைகள், பாடல் அல்லது முழுமையான மௌனத்தை உள்ளிட்டவற்றைப் பயன் படுத்தலாம்.

மொழி பயன்படுத்தப்படும் போது பிரார்த்தனை ஒரு பாடல் வடிவம், மந்திரம்,

முறையான நம்பிக்கை அறிக்கை, அல்லது பிரார்த்தனை நபரின் ஒரு தன்னிச்சையான சொற்பொழிவு ஆக இருக்கலாம்.

வேண்டுகோள், பிரார்த்தனை விண்ணப்பம், நன்றி மற்றும் புகழ்பாடுதல் எனப் பிரார்த்தனையின் வெவ்வேறு வடிவங்கள் உள்ளன.

பிரார்த்தனையானது ஒரு தெய்வம், ஆவி, இறந்தவர் அல்லது உயர்ந்த யோசனை, வழிபாட்டிற்கான நோக்கம், வழிகாட்டுதல் கோருதல், பாவங்களை ஒப்புக்கொள்ளுதல் அல்லது ஒருவரின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கி இருக்கலாம்.

எனவே, தனிப்பட்ட நன்மைக்காக அல்லது மற்றவர்களுக்காக எனப் பல காரணங்களுக்காக மக்கள் பிரார்த்தனை செய்கிறார்கள்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் ”பிரார்த்தனைப் பத்து” என்றை தலைப்பில் பத்து பாடல்களைப் பாடி மகிழ்ந்துள்ளார்.

## 1.பிரார்த்தனை செய்வது எப்படி?

மனிதனுக்கே உரித்தானது பிரார்த்தனை

பிரார்த்தனை செய்வது என்பது ஹிந்து, கிறிஸ்தவம், முஸ்லீம், புத்தம், சமணம், யூதம் உள்ளிட்ட அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களும் புரியும் ஒன்று.

மானிட குலம் முழுமைக்கும் பொதுவாக அமைந்த சிறப்பியல்புகளில் பிரார்த்தனையும் ஒன்று; முக்கியமானதும் கூட.

ஆனால் பிரார்த்தனையை எப்படிச் செய்தல் வேண்டும் என்பது மாபெரும் இரகசியம்.

எனக்குச் செல்வம் வேண்டும்; நான் புகழ் பெற வேண்டும்; எனக்கு அதிகாரம் வேண்டும்; நான் அமைச்சராக வேண்டும், எனக்கு பிள்ளை பிறக்க வேண்டும்,

எனக்கு நோய் நீங்க வேண்டும் என்றெல்லாம் பலரும் கோவில் உள்ளிட்ட பிரார்த்தனை ஸ்தலங்களில் பிரார்த்தனை புரிவதை அறிவோம்.

அவர்களின் நம்பிக்கைக்கும் பூர்வ கர்ம வினைகளுக்கும் தக்கபடியும் (செயல்விளைவு தத்துவப்படி) வேண்டுகின்ற ஸ்தலத்தில் அருள் பாலிக்கும் தெய்வத்தின் அருளுக்கும் ஏற்ப பெரும்பாலானோரது பிரார்த்தனை நிறைவேறி விடுகிறது.

இதனாலேயே பிரார்த்தனைக்கு மகத்துவம் அதிகமாகிறது.

**எப்படிப் பிரார்த்திப்பது?**

அருளாளர்களும் மகான்களும் பிரார்த்தனையை சரியாகச் செய்வது எப்படி என்று கூறி அருளி இருக்கின்றனர்.

தாயுமானவர் மிக அழகாகச் சொல்லி இருக்கிறார்:-

“எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே!”

மக்கள் அனைவரும் இன்புற்றிருக்க வேண்டும் அதுவே அவரது நிரந்தர பிரார்த்தனை.

“அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே எய்தும் பராபரமே”

என்றும் அவர் அருளி இருக்கிறார்.

மாபெரும் ரகசியங்கள் இரண்டை மிக எளிமையாகச் சொல்லி விட்டார் அருளாளர்.

அனைவரின் நலனையும் வேண்டு; அனைவருக்கும் தொண்டு செய் – இதுவே நீ நலம் பெற வழி; உனக்கு நன்மை தரும் வழி.

வேதாத்திரியம் தரும் பிரார்த்தனை

வேதாத்திரியம் தனி மனிதனுக்குத் என்ன தேவை என்பதை உணர் ந்து பிரார்த்தனையை வகுத்துள்ளது.

"அருட்பேராற்றல் கருணையினால் உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்வேன்.

மாணவர்களுக்கான பிரார்த்தனை1

"அருட்பேராற்றல் கருணையினால், உடல்நலம், நீள் ஆயுள், ஒழுக்கம், கல்வி உயர்வடைந்து மேன்மேலும் சிறப்பாய்  வாழ்வேன்."

மாணவர்களுக்கான பிரார்த்தனை 11

"அருட்பேராற்றல் கருணையினால், உடல் நலம், நீள் ஆயுள், ஒழுக்கம், கல்வி கடமை இவற்றில் நான் கருத்தோடு உயர்வேன்."

மானுடத்திற்கான பிரார்த்தனை 1

"உலகிலுள்ள பொறுப்புடைய தலைவ ரெல்லாம்
உயிரறிவை உள்ளுணர்வாய்ப் பெறுதல் வேண்டும்.
உலகனைத்து நாடுகளின் எல்லை காக்க,
ஒருலகக் கூட்டாட்சி வலுவாய் வேண்டும்.
உலகில் போர்பகை அச்சமின்றி மக்கள்
உழைத்துண்டு, வளம்காத்து வாழ வேண்டும்.
உலகெங்கும் மனிதகுலம், அமைதி என்னும்
ஒருவற்றாத நன்னிதி பெற்றுய்ய வேண்டும்" . (ஞாக.பா.1852)

மானுடத்திற்கான பிரார்த்தனை 11

"உலகமெல்லாம் பருவமழை ஒத்தபடி பெய்யட்டும்!
உழவரெல்லாம் தானியத்தை உவப்புடனே பெருக்கட்டும்!
பலதொழில்கள் புரிகின்ற பாட்டாளி உயரட்டும்!
பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பண்பாட்டை உயர்த்தட்டும்!
கலகங்கள் போட்டிபகை கடந்தாட்சி நடக்கட்டும்!
கல்லாமை, கடன்வறுமை, களங்கங்கள் மறையட்டும்!
நலவாழ்வை அளிக்கும்மெய்ஞ் ஞானஒளி வீசட்டும்!
நம்கடமை அறவாழ்வின் நாட்டத்தே சிறக்கட்டும்!" (ஞாக.பா.1853)

மானுடத்திற்கான பிரார்த்தனை 111

"ஏரி, குளம், கிணறு, ஆறு
எல்லாம் நிரம்பி வழிய,
மாரி அளவாய் பொழிக்!
மக்கள் வளமாய் வாழ்க!" (ஞாக.பா.1854)

**வள்ளலார் கூறும் பிரார்த்தனை இரகசியம்**

இராமலிங்க வள்ளலார் சுவாமிகள் ஏராளமான இரகசியங்களை நூல் வடிவிலும் பா வடிவிலும் அருளியுள்ளார். பிரார்த்தனை இரகசியம் பற்றியும் அவர் கூறியுள்ளார்.

பிரார்த்தனை என்ற தலைப்பில் அவரது அருள் மொழிகள் இதோ:-

**“பாதி இரவி லெழுந்தருளிப் பாவியேனை யெழுப்பியருட் ஜோதி யளித்தென் னுள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய் நீதி நடஞ்செய் பேரின்ப நிதிநான் பெற்ற நெடும்பேற்றை ஓதிமுடியா தென்போலிவ் வுலகம் பெறுதல் வேண்டுவனே”**

**“ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெலாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால், அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கி விடுகின்றன. பிரார்த்தனை செய்ய வேண்டுமாகில் இப்படித்தான் செய்ய வேண்டும்: என்பதே பிரார்த்தனையாகும்.”**

**தான் பெற்ற பெரும் பேற்றை நெடும் பேறு என்று கூறும் அவர் அதை அனைத்து மக்களும் பெற வேண்டுவேனே என்கிறார்.**

**இது தான் உண்மையான பிரார்த்தனை என்னும் மாபெரும் இரகசியத்தையும் தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றார்.**

**“சர்வே ஜனா சுகிநோ பவந்து”**
**“லோகாஸ் ஸமஸ்தா சுகிநோ பவந்து”**

**என்று காலம் காலமாக மகான்கள் சொல்லி வருகின்றனர். அனைவரின் நலனுக்குமாக அருள் வேண்டுவதே பிரார்த்தனை;**

**அதைச் செய்யும் போது நமது நலன்களும் தாமாகவே கூடி விடும்.**

**இறைவனின் இந்த அருள் ‘மெக்கானிஸம்’ இரகசியமான ஒன்று.**

**அதைத் தாயுமானவர், வள்ளலார்? வேதாத்திரி மகரிஷி போன்றோர் நமக்காக எளிய தமிழில் “உடைத்துப் போட்டுத்” தருகின்றனர்.**
**ஆக உண்மையான பிரார்த்தனை எது என்பதை அறிந்த சந்தோஷத்தில் கூறுவோம்:**

**சர்வே ஜனா சுகிநோ பவந்து**

**லோகாஸ் ஸமஸ்தா சுகிநோ பவந்து**

**எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே!**

## 2. அலர்ந்து போனேன் அருள்செய்யாய்

"உன் மீது அன்பு மிகுமாறு எனக்கு நீதான் அருள் செய்ய வேண்டும்" என மாணிக்கவாசகர் இறைவனின் அன்பைப் பெற வேண்டுகிறார்.

கலந்து நின்அடி யாரோடு அன்று
 வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
 புகுந்துநின்ற திடர்பின் நா ள்
உலர்ந்து போனேன் உடையானே
 உலவா இன்பச் சுடர்காண்பான்
அலர்ந்து போனேன் அருள்செய்யாய்
 ஆர்வம் கூர அடியேற்கே." (திருவாச.பா.485)

நீ ஆட்கொண்டபோது உன் அடியார்களோடு கூடி வீணே மகிழ்ந்து இருந்தேன். அந்தக் காலம் கழிந்து விட்டது. அதன் பின்னர் துன்பம் வந்து என்னைத் தொற்றிக் கொண்டது. அதனால் மிகவும் வாடி நிற்கிறேன்.

என்னை ஆட்கொண்டவனே! என்றும் அழியாத இன்பத்தைத் தரும் ஒளிப்பிழம்பைக் காண வேண்டும் என்று வருத்தம் அடைகிறேன். உன் மீது அன்பு மிகுமாறு எனக்கு நீதான் அருள் செய்ய வேண்டும்.

"துன்பம் வந்து தன்னை தொற்றிக் கொண்டது" என்று இப்பாடலில் மாணிக்கவாசகர் வருந்துகிறார்.

ரிக் வேதாத்தில் ஒரு சுலோகம்.

"ஸங்கச்சத்வம் ஸம்வதத்வம் ஸம்வோ மனாம்ஸி ஜானதாம்
ஸமானோ மந்த்ர. ஸமிதி. ஸமானீ
ஸமானம் மன.ஸஹசித்தம் ஏஷாம்!
ஸமானீ வ ஆகூதி. ஸமானா ஹ்ருதயானி வ.!!
ஸமானம் அஸ்து வோ மனோ யதா வஸ்ஸீ ஸஹாதி!!!(ரிக்வேதம்)

கூடியிருங்கள். ஒத்துப் பேசுங்கள். உங்கள் உள்ளங்கள் ஒரே பாங்கில் ஓர்க. பிரார்த்தனை பொதுவானது ஆகுக.

உங்கள் கூட்டத்தின் குறிக்கோள் ஒன்றேயாகுக. ஒரே தீர்மானம் கொள்ளுங்கள்.

உங்களுடைய நோக்கம் ஏகோபித்து இருக்கட்டும். உங்களுடைய உணர்ச்சியில் ஒற்றுமை நிலவுக.

உங்களுடைய அன்பில் ஐக்கியம் ஓங்குக. உங்களுடைய எண்ணம் இணைந்திருக்கட்டும். அங்ஙனமே உங்களுடைய இணக்கம் நிறைவு எய்துக.

துன்பத்தை ஒழுக்கமுடன் தீர்த்தால் போதும், இன்பம் மிகுந்துவிடும்" என்று வேதாத்திரியம் வழி காட்டுகிறது.

"இன்பமே அள வமுறை மீற மாறத்
துன்பமாய் மாறவிடும். இயற்கை உண்மை!
இன்பமே துய்க்க வெனில்,தோன்றுகின்ற
துன்பத்தை ஒழுக்கமுடன் தீர்த்தால் போதும்" (ஞாக.பா.1252)

அறிவின் அலையாகிய மனமானது, புறப்பொருகளினல் தொடர்பு கொண்டு அனுபவிக்கும் போது ஏற்படுகிற உணர்ச்சியை இன்பம், துன்பம் என்று கணிக்கிறது.

எந்த அனுபவத்தை மனம் இன்பம் என்று கருதுகிறதோ, அந்தத் துய்ப்பில் அளவும் முறையும் மீறினாலும், மாறினாலும் துன்பமாக அனுபவிக்கிறது. இதுவே இயற்கை என்னும் இறைநிலையின் உண்மை நிலையாகும்.

இன்பத்தை மட்டுமே அனபவிக்க வேண்டும் என்று விரும்பினால், விளைகின்ற துன்பதை ஒழுக்க உணர்வுடன் தீர்வு செய்தாலே போதுமானது.

அதாவது உடலில் சக்தி குறையும் போது ஏற்படும் பசி என்ற உணர்வை மனம் துன்பமாக உணர்கிறது.

அந்தத் துன்பம் நீங்குகிற அளவிற்கு முறையோடு உணவை உட்கொண்டால் துன்பம் நீங்கி விடுகிறது.

ஆனால் அந்த உணவில் இன்பம் இருப்பதாக மயக்க நிலையில் மனம் கருதி மேலும் மேலும் உட்கொண்டாலும், முறையற்ற உணவை உட்கொண்டாலும்,

இரைப்பையில் சுரக்கும் ஹைடிரோ குளோரிக் என்னும் கரிகதா அமிலம் உணவைக் கரைப்பதற்குப் போதுமான அளவு இல்லாமலும், கரைக்க முடியாமலும் அங்கேயே தங்கிவிடுகிறது.

இதனால் புளிப்பு ஏறி அஜீரணக் கோளாறு, வாந்தி, மயக்கம், வயிற்றோட்டம் போன்ற பல துன்பங்களை வெளிப்படுத்தி விடுகிறது.

அளவோடும் முறையோடும் புலன்கள் மூலம் துய்க்கப்படும் போது துன்பம் நீங்கி இன்பம் மிகுதி ஆகும். எனவே அடியார்களோடு இருந்து இன்பம் துய்த்த மாணிக்கவாசகருக்கும் இந்த நியதி பொருந்தும்.

## 3. கடுவினையைக் களைந்து விடலாமா?

"போக்குதற்கு அரிய வினைகளைப் போக்கி, உனது பேரருள் வெள்ளம் என்னுள் மிகுமாறு செய்து, இடைவிடாது என் உள்ளம் உருக அருள் செய்வாயாக!" என்று இப்பாடலில் மாணிக்கவாசர் பிரார்த்தனை செய்கிறார்.

பிரார்த்தனை எப்படி இருக்க வேண்டும்.

ஒரு கிராமத்தில் ஏழைப்பெண் ஒருத்தி இருந்தாள். அவளுக்குச் சொந்தமாக ஒரு பசுமாடு இருந்தது. அவள் அந்தப் பசுமாட்டிலிருந்து பாலைக் கறந்து, ஊர் மக்களுக்கு விற்றுவந்தாள். அதில் கிடைக்கும் வருமானத்தில் குடும்பம் நடத்தினாள்.

அந்தக் கிராமத்தின் எல்லையில் உள்ள ஆற்றின் மறுகரையில் ஒரு கோயில் அர்ச்சகர் வாழ்ந்து வந்தார். தினமும் பூஜைக்கு இந்தப் பெண்ணிடம்தான் அவர் பால் வாங்குவார்.

சில நாட்களாக குறித்த நேரத்தில் அந்தப் பெண்மணியால் பால் கொண்டு வர இயலவில்லை. இதனால் கோபம்கொண்ட அர்ச்சகர், ஒரு நாள் அவளைக் கூப்பிட்டார்.

``ஏன், அம்மா ... பார்த்தாயா... உன்னுடைய காலதாமத்தால் என்னால் உரிய நேரத்தில் பூஜையை முடிக்க முடியவில்லை'' என்று கொஞ்சம் கோபமாகவே கடிந்துகொண்டார்.

``மன்னிக்கவேண்டும் சுவாமி, நான் வீட்டிலிருந்து முன்னதாகவே கிளம்பிவிடுகிறேன். ஆனால். ஆற்றைக் கடந்து வர வேண்டும் என்பதால், கரையில் படகுக்காக வெகுநேரம் காத்திருக்க வேண்டியிருக்கிறது" என்றாள் பணிவுடன்.

அப்பாவியாக அந்தப் பெண் சொன்ன பதிலைக் கேட்டு மனமிரங்கினார் அர்ச்சகர்.

“என்னது... ஆற்றைக் கடக்கப் படகுக்கு காத்திருக்கிறாயா?

அவனவன் பிறவிப் பெருங்கடலையே `கடவுள்’ பெயரைச் சொல்லிக்கொண்டே கடந்துவிடுகிறான்.

நீ என்னடாவென்றால், சிறிய ஆற்றைக் கடப்பதற்கெல்லாம் படகோட்டியை நம்பிக்கொண்டிருக்கிறாயே!

இதுதான் கடைசி. இனிமேல் சரியான நேரத்துக்கு வரவில்லை என்றால், எனக்கு நீ பால் கொண்டுவர வேண்டாம்" என்று கூறிவிட்டு வீட்டுக்குள் சென்றுவிட்டார்.

அவர் இதைக் கொஞ்சம் கேலியாகத்தான் சொன்னார். ஆனால், அதை, அந்த அப்பாவிப் பெண்ணால் உணர முடியவில்லை.

'இந்த ஊரிலேயே அதிகமாக பால் வாங்குபவர் இவர் ஒருவர்தான். இவரும் இப்படிச் சொல்லிவிட்டாரே... என்ன செய்வது?' என வருத்தத்துடன் கிளம்பிச் சென்றாள்.

அதன் பிறகு, சில நாட்களுக்கு அவள் குறித்த நேரத்துக்குள் வந்து விட்டாள். அந்தப் பெரியவருக்கே அது ஆச்சர்யமாக இருந்தது. ஒரு நாள் சந்தேகத்தோடு அவளைக் கூப்பிட்டார்.

"இப்போதெல்லாம் சரியான நேரத்துக்குள் வந்துவிடுகிறாயே... எப்படியம்மா?" என்று கேட்டார்.

"அது ஒன்றும் பெரிய மந்திரம் இல்லை, சுவாமி. நீங்கள் சொன்னது போலத்தான் செய்கிறேன்."

"என்னது... நான் சொன்னபடியா! ஆற்றின் தண்ணீர் மேல் நடந்தா வந்தாய்..!" என்றார் கேலியுடன்.

"ஆமாம் சுவாமி! அப்படித்தான் நடந்துவந்தேன்" என்றாள் அந்தப் பெண் உறுதியான குரலில்.

`இது எப்படிச் சாத்தியம்?' அர்ச்சகரின் மனதுக்குள் சந்தேகம் இருந்தாலும், அதை அவர் வெளிகாட்டிக்கொள்ளவில்லை. "எங்கே... என் கண்முன்னே நடந்துகாட்டுவாயா?" என்று கேட்டார்.

அவள் மறுக்கவில்லை "நிச்சயமாகக் காட்டுகிறேன்!'' என்றாள். இருவரும் ஆற்றங்கரைக்குச் சென்றனர்.

"நீ முன்னே செல், நான் உன்னைப் பின்தொடர்கிறேன்" என்றார் அர்ச்சகர்.

உடனே அந்தப் பெண்மணி, கை இரண்டையும் கூப்பியபடி, கடவுளின் பெயரைக் கூறியபடியே தண்ணீரில் நடக்க ஆரம்பித்தாள்.

கண்முன்னே நடந்ததை நம்ப முடியாமல் பார்த்த அர்ச்சகருக்கு ஒரு பக்கம் அதிர்ச்சி... அதை வெளிகாட்ட முடியாமல், நீண்ட தயக்கத்துக்குப் பிறகு அவளைப் பின்தொடர்ந்தார்.

`ஆற்றின் ஆழம் எவ்வளவு இருக்கும் என்று தெரியலையே' என்று பயத்துடன் நினைத்தபடியே கடவுளின் பெயரைக் கூறியபடி, இறங்க முயற்சித்தார்.

ஆனால் அவருக்கு ஓர் எண்ணம்....`தண்ணீரில் நடக்க முடியுமோ முடியாதோ... ஒருவேளை நீரில் விழவேண்டி இருந்தால், குறைந்த பட்சம் ஆடையாவது நனையாமல் இருக்கட்டுமே...' என நினத்தவர் தன்னுடைய ஆடையைக் கைகளால் தூக்கிப் பிடித்துக்கொண்டு ஆற்றில் இறங்கினார்.

ஆனால், கால் தண்ணீருக்கு உள்ளே சென்றது. அர்ச்சகர் திடுக்கிட்டார். வேறு வழி தெரியாமல் திரும்பி, கரையேறினார்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அந்தப் பெண் திரும்பி அவர் இருக்கும் கரைக்கே வந்தாள்.

"என்னை மன்னித்துவிடம்மா! என்னால் உன்னைப் போல் நீரில் நடக்க முடியவில்லை. உண்மையாகவே நீ நீர் மேல் நடந்து சென்றது எப்படி சாத்தியமானது என்பதை எனக்குச் சொல்லேன்..." என்று கேட்டார் குழைந்த குரலில் அர்ச்சகர்.

அந்தப் பெண் பணிவுடன், “சுவாமி.... உங்கள் உதடுகள் கடவுள் பெயரைச் உச்சரித்தாலும், உங்கள் கைகள் இரண்டும் உங்கள் உடைகள் நனையக் கூடாது என்பதற்காக தூக்கிப் பிடித்துக்கொண்டே இருந்தன. அதன் பிறகு நீங்கள் நீரில் இறங்கினீர்கள். கடவுள் மேல் உண்மையாகவே உங்களுக்கு நம்பிக்கை இருந்திருந்தால், அப்படிச் செய்திருக்க மாட்டீர்கள்" என்ற அந்தப் பெண் சற்றுத் தயங்கிவிட்டுச் சொன்னாள்...

``மேலும், ஆற்றின் ஆழத்தைப் பரீட்சித்து பார்ப்பது, அந்த ஆண்டவனையே ஆழம் பார்ப்பது போன்றது அல்லவா?” என்றாள்.

அந்தப் பெண் இதைச் சாதாரணமாகச் சொன்னாலும், அதை அந்த இறைவனே நேரில் வந்து சொன்னதுபோல இருந்தது அர்ச்சகருக்கு. அவர் வெட்கித் தலைகுனிந்தார்.

இறைவன் மீது நம் நம்பிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்க, பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் கூறிய கதை இது.

பிரார்த்தனை என்பது அந்தப் பெண்ணின் மனநிலையைப் போலத்தான் இருக்கவேண்டும்.

அந்த அர்ச்சகரைப்போல இருக்கக் கூடாது என்பதுதான் ஸ்ரீராமகிருஷ்ணர் நமக்கு உணர்த்தும் செய்தி.

இதைத்தான், `உள்ளன்போடு ஒருவன் இறைவனிடத்துப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

உள்ளூர ஒரு மனிதன் எதை விரும்புகிறான் என்பதை இறைவன் நன்கு அறிகிறார். அதனை நிறைவேற்றவும் செய்கிறார்' என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

"அடியார் சிலர் உன் அருள்பெற்றார்
  ஆர்வங் கூர யான் அவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி
  முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியேன் உடைய கடுவினையைக்
  களைந்து உன் கருணைக் கடல்பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
  ஓவா துருக அருளாயே." (திருவாச.பா.486)

என்னை அடிமையாக உடையவனே! அன்று அடியார் சிலர் நின்னுடைய திருவருளில் கலந்தனர்.

அன்று உன்னுடன் கலக்காத நான், புலால் நாற்றம் வீசும் பிணமாகப் போகும் இந்த உடம்பில் இருக்க ஆர்வம் கொண்டு, தவம் இல்லாது, ஒரு முடிவு அறியாது, அந்த வெறுப்பினால் விரைந்து முதுமை அடைந்து கொண்டு இருக்கிறேன்.

"என்னுடைய போக்குதற்கு அரிய வினைகளைப் போக்கி, உனது பேரருள் வெள்ளம் என்னுள் மிகுமாறு செய்து, இடைவிடாது என் உள்ளம் உருக அருள் செய்வாயாக!" என்று மாணிக்கவாகர் பிரார்த்தனை செய்கிறார்.

வினைகளை போக்க என்ன செய்ய வேண்டும்? வழிகாட்டுகிறது வேதாத்திரியம்.

"புலன்கவர்ச்சி மயக்கத்தால் உணர்ச்சி மீறி,
  புறத்தாற்றும் செயல்களெல்லாம் வீழ்ச்சி காட்டும்.
புலன்கள் தமை அறிவாலே ஆளக் கற்கும்
  பொறுப்புடைய வாழ்க்கைநெறி ஆக்கம் நல்கும்.
புலன்மயக்கம் தன்முனைப் பப் பழிச் செயலகள்,
  புகழ்போக்கும்பொருட்கள் உயிர்ப் பற்றுயர்த்தும்.
புலன்அடக்கம் இம்மூன்று களங்கம் போக்கி,
  புவி வாழ்வில் நிறைவதரும். பிறப்பறுக்கும்." (ஞாக.பா.1489)

ஐந்து புலன்கள் மூலம் அறிவானது மனமாக இயங்கிப் பெற்ற பழக்கப் பதிவுகள் பற்றுக்களாகி விடுகின்றன.

புலன்களானது வெளியில் உள்ள பொருட்களளோடு சீவன்களோடு தொடர்புகொண்டு, மயக்க நிலையில் உணர்ச்சிவயப்பட்டு செயல்களாற்றுகிறபோது, அறிவு தெளிவு இன்மையால் கீழ்மைப்பட்டு, தாழ்ந்த நிலையில் வீழ்ச்சி அடையும்.

புலன் மயக்கமானது தன்முனைப்பால் ஆறு துர்க்குணங்கள் வயப்பட்டு ஐந்து பெரும் பழிச்செயல்களாக வெளிப்படும். அதனால் மனிதனின் பெருமையைப் புகழைப் போக்கிவிடும்.

பொருட்கள் பேரிலும் உயிர்களிடத்தும் பற்றுக்களை உயர்த்திவிடும். முன்னேறத்தையும் நல்கும்.

புலன் அடக்கமானது தன்முனைப்பு, பழிச்செயல்கள், பற்றுக்கள் ஆகிய மூன்று களங்கங்களை யம் அறிவிலிருந்து போக்கி நில உலக வாழ்வில் நிறைவைத்தரும்.

பிரார்த்தனையை அறுக்கும் நல்வினைகள் நிறைவான வாழ்வையும், தீவினைகள் துன்ப வாழ்வையும் விளைவிக்கும்.

புலன் மயக்கில் அறிவின் செயல்பாடு தீவினைகளையும், அறிவின் கட்டுக்குள் புலன்களின் செயல்பாடு நல்வினைகளையும் உருவாக்கும்.

## 4. பிரார்த்தனைக்குப் பலன் உண்டா?

அமெரிக்க தொழிலதிபரும், பல சுய முன்னேற்ற நூல்களின் ஆசிரியருமான டயிள்யூ.கிளெமென்ட் ஸ்டோன் (W. Clement Stone) சொல்லியிருக்கிறார்...

`மனிதனின் மிகப்பெரும் சக்தி பிரார்த்தனை.' அதிலும் ஒரு சின்ன நுணுக்கமுண்டு. உளமுருகி, மனதார, தனக்காக அல்லாமல் வேறு யாரோ ஒருவருக்காகச் செய்யும் பிரார்த்தனைக்குத்தான் அபார சக்தி. வேண்டுதலுக்கு மட்டுமல்ல... மற்றவரை நினைத்து, பிறருக்காகச் செய்யும் ஒரு சிறு செயலுக்குக்கூட பலன் கிடைக்கும்.” இதை உணர்த்தும் கதை ஒன்று உண்டு.

இந்தக் கதை கற்பனையாக இருக்கலாம்; இப்படி ஒன்று நடக்கவே நடக்க முடியாத சம்பவமாகவும் தோன்றலாம். ஆனால், இந்தக் கதை உணர்த்தும் உண்மை யாராலும் மறுக்க முடியாதது.

ஒரு பயணிகள் கப்பல் புயலில் மாட்டிக்கொண்டது. உடைந்து

மூழ்கியும் போனது. அந்தக் கப்பலில் பயணம் செய்த இரண்டு பேர் மட்டும் எப்படியோ, கையில் கிடைத்த மரக்கட்டைகளைப் பற்றிக்கொண்டு தப்பித்து, ஓர் ஆளர வமற்ற தீவில் கரையொதுங்கினார்கள்.

இருவரும் நண்பர்கள். அடுத்து என்ன செய்யலாம் என்பது இருவருக்குமே தெரியவில்லை. அவர்களைக் காப்பாற்றக் கடவுளைத் தவிர வேறு துணை இப்போது இல்லை.

எனவே, பரஸ்பரம் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அந்தத் தீவின் ஒரு கரையில் ஒருவரும், அதற்கு நேர் எதிர்ப்புறத்தில் இன்னொருவரும் கடவுளிடம் பிரார்த்தனை செய்யவேண்டியது... யாராவது ஒருவரின் வேண்டுதலுக்குக்கூடவா செவி சாய்க்காமல் போய்விடுவார் கடவுள்? உதவி வரும்...

அப்போது இருவருமே இந்தத் தீவிலிருந்து தப்பித்து, தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பிவிடலாம்.

உதவி ஏதும் கிடைக்காத, உதவிக்கு ஆள் யாரும் இல்லாத, எதிர்காலம் என்னவென்றே புரியாத சூழ்நிலையில் இந்த ஒப்பந்தம் இருவருக்குமே சரி என்று தோன்றியது.

ஒப்பந்தப்படி இருவரும் பிரிந்து தீவின் எதிர் எதிர் திசைக்குப் போனார்கள். பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தார்கள்.

முதலாமவன் கடவுளை நினைத்து வேண்டுகோள் விடுத்தான்... ``கடவுளே... பசி... அகோரப்பசி... சாப்பிட ஏதாவது கொடு!''

இரக்கமில்லாதவரா கடவுள்?! அவன் கண்ணைத் திறந்து பார்த்தபோது, சற்று தூரத்தில் ஒரு மரம் தெரிந்தது... பழுத்துத் தொங்கிக்கொண்டிருந்தன ஆப்பிள் பழங்கள். அவன் அவற்றைப் பறித்துப் பசியாறினான்.

அதே நேரத்தில், இரண்டாமவன் உணவுக்கு என்ன செய்வான் என்று அவன் யோசிக்கக்கூட இல்லை.

முதலாமவனுக்கு உணவுப் பிரச்னை தீர்ந்தது. துணைக்கு ஆளிருந்தால் நல்லதே என்று தோன்றியது... அதிலும் நம் மனைவி உடனிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று நினைத்தான்.

கடவுளை நினைத்துப் பிரார்த்தித்தான். அடுத்த நாள், அவனிருந்த தீவுக்கருகே ஒரு கப்பல் விபத்துக்குள்ளானது. அந்தக் கப்பலில் அவனைத் தேடிக்கொண்டு வந்திருந்த மனைவியும் இருந்தாள்.

எப்படியோ தப்பிப் பிழைத்து,மிகச் சரியாகத் தன் கணவன் இருக்கும் தீவுக்கு, அவனிடமே வந்து சேர்ந்தாள். அவளை வாரியணைத்துக்கொண்டான் அவன். அவனுக்கு ஆச்சர்யமான ஆச்சர்யம்.

`நான் நினைப்பதெல்லாம் நடக்கிறதே... நிச்சயம் கடவுள் இருக்கிறார்... என் பிரார்த்தனைக்கு செவி சாய்க்கிறார்...' என்று யோசித்தான்.

அடுத்த நாள், அவனுக்கும் அவன் மனைவிக்கும் உடைகள் வேண்டும், ஒரு வீடு வேண்டும், பிடித்த உணவு வேண்டும்... என்றெல்லாம் கடவுளிடம் பிரார்த்தித்தான்.

அந்தத் தீவு ஓர் அட்சய பாத்திரம்போல அவன் கேட்ட அனைத்தையும் தந்தது. அவன் மனம் நிறைந்துபோனான்.

அப்போதும் அவன் எதிர்த் திசையிலிருக்கும் தன் நண்பனைப் பற்றி யோசிக்கவேயில்லை.

`எல்லாம் கிடைத்துவிட்டது... இனி வீடு திரும்பவேண்டியதுதான் பாக்கி. அதுவும் பிரார்த்தித்தால் கிடைக்காதா என்ன..?' அவன் கடவுளை நோக்கி பிரார்த்தனை செய்தான்.

அது ஆச்சர்யமான சங்கதியல்ல... அற்புதம்! கடவுள் மனமிரங்கிவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அடுத்த நாள் காலையில் அவனிருக்கும் கடற்கரையோரமாக ஒரு கப்பல் வந்து நின்றது. அவன், தன் மனைவியை அழைத்துக்கொண்டு கப்பலில் ஏறுவதற்காக விரைந்தான்.

அப்போதும் மற்றொரு திசையில் இருக்கும் தன் நண்பனைப் பற்றி அவன் யோசிக்கவேயில்லை. கடவுள் தன் நண்பனின் பிரார்த்தனைக்கு செவி சாய்க்கவில்லை என்று நினைத்தான்.

அவன் கப்பலில் ஏறப்போகும் நேரத்தில், வானிலிருந்து ஓர் அசரீரி ஒலித்தது... ``கொஞ்சம் பொறு... நீ ஏன் உன் நண்பனை விட்டுவிட்டுத் தனியாகக் கிளம்புகிறாய்?''

``நான் என்னவெல்லாம் கேட்டு பிரார்த்தனை செய்தேனோ, அவையெல்லாம் எனக்குக் கிடைத்தன. அது என் பாக்கியம். ஆனால், என் நண்பனின் பிரார்த்தனை தகுதியில்லாதது. அதனால்தான் அவன் கேட்ட எதுவும் அவனுக்குக் கிடைக்கவில்லை...''

அசரீரி சொன்னது... ``நீ தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறாய். அவன் ஒரே ஒரு பிரார்த்தனைதான் செய்தான். அதை நான் நிறைவேற்றித்

தந்தேன். அது மட்டும் இல்லையென்றால், உன்னுடைய எந்த வேண்டுதலும் நிறைவேறியிருக்காது...''

``அப்படியா கடவுளே... என் நண்பன் அப்படி என்னதான் பிரார்த்தனை செய்தான்?''

``உன்னுடைய எல்லா கோரிக்கைகளும், வேண்டுதல்களும் நிறைவேற வேண்டும் என்று பிரார்த்தனை செய்தான்...

அமுதப் பெருங்கடலில் முழ்கவும்,இறை அன்பைப் பெறவும் வேண்டும் என்று மாணிக்கவாசகர் இப்பாடலில் பிரார்த்தனை செய்கிறார்.

"அருளா அமுதப் பெருங்கடல்வாய்
  அடியாது எல்லாம் புக்கு அழுந்த
இருளார் ஆக்கை இதுபொறுத்தே
  எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருளார் மனத்து ஓர் உன்மத்தன்
  வருமால் என்று இங்கு எனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்யன்பை
  உடையாய் பெறநான் வேண்டுமே." (திருவாச.பா.487)

என்னை அடிமையாக உடையவனே! நினது அருளாகிய அமுதப் பெருங்கடலில் அடியார்கள் அனைவரும் புகுந்து மூழ்கவும், நான் மட்டும் மூழ்காது, அறியாமை நிறைந்த இந்த உடம்பைச் சுமந்து களைப்பு அடைந்து விட்டேன்.

எமது தலைவனே! இங்கு என்னைக் காண்பவர்கள் சித்தம் கலங்கிய ஒரு பித்தன் வருகிறான் என்று அஞ்சி ஒதுங்காதவாறு, உனது உண்மையான அன்பை நான் பெறுதல் வேண்டும்.

கன்னிப்பெண் ஒருத்தி, சிற்றின்பத்தை வேம்புபோல் சகப்பானது என நினைத்திருந்தும், மங்கைப் பருவம் வந்தவுடன், கணவனுடன் கூடி இன்பந் துய்த்த பிறகு, முன்னம் அதனை பழித்துரைத்ததை நினைந்து நகை செய்வாள்.

அதுபோல போகி, யோகியரின் மற்றும் யோகத்தின் அருமை தெரிந்த பின், இவ்வழிக்கு வர முயற்சி செய்கிறான். மீண்டு வரவும் அவனுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது என்று சுகவாரியில் தாயுமானவர் பாடுகிறார்.

கன்னிகை ஒருத்தி சிற்றின்பம் வேம்பு என்னினும்
  கைக்கொள்வள் பக்குவத்தில்,
கணவன் அருள் பெறின்முனே சொன்னவாறு என்எனக்
  கருதிநகை யாவள் அதுபோல்

சொன்னபடி கேட்கும் இப் பேதைக்கு நின்கருணை
தோற்றின் சுகாரம்பமாம். (தா.பா.77. சுகவாரி பா.1)

இதைத்தான், ”அதுபோல சொன்னபடி கேட்டு நடக்கும் இப்போதைக்கு நின் கருணை தோற்றின் சுகாரம்பமாம்” என்று அழகாக முடிக்கிறார் தாயுமானவர்.

பேரின்பம் எப்படி இருக்கும் தெரியுமா? வேதாத்திரியார் பேரின்பக் களிப்பில் பாடுகிறார்.

இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா - எங்கும்
இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா!
அன்பு ஊற்றாய்ப் பெருகி அனைத்துயிர்க்குள்ளும் அறிவாய்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா (ஞா.க.பா.1648-1)

அதைவிடப் பெரிய இன்பம் இல்லை என்பதைக் குறிக்க பேரின்பம் என்கிறோம். மாணிக்கவாசகர் அமுதபெருங்கடல் என்கிறார்.

மன அலைச் சுழலானது குறைந்து அறிவு என்ற நிலைக்குப் புகும்போது, தன்னையே எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் தனக்குள்ளேயும் காண்கின்ற அகத்துணர்வு ஏற்படும். அதுவே பேரின்பம், பேரானந்த நிலையாகும்.

## 5.எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்!

அக்காலத்தில் வாழ்ந்துவந்த துறவி ஒருவர், எந்த தெய்வத்தை நோக்கியும், ஒரு இரண்டு நிமிடம் இறைவேண்டல் செய்தால், அடுத்த நிமிடமே, அந்த வேண்டுதலின்படி, எல்லாமே நடக்குமாம்.

அந்த துறவி பற்றி கேள்விப்பட்ட அந்த நாட்டு மன்னர், அந்த துறவியிடம் சென்று, ஞானியாரே, நீங்கள் எதை நினைத்து பிரார்த்தனை செய்தாலும் அது நிறைவேறும் என்று கேள்விப்படுகிறேன்.

அதனால் தாங்கள் எனக்காக, எனது மனைவிக்காக, எனது மகனுக்காக, மகளுக்காக, இந்த நாட்டு குடிமக்கள் அனைவருக்காகவும் கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டார்.

மன்னர் சொன்னதைக் கேட்ட துறவி சிரித்துக்கொண்டே, நான் பிரார்த்தனை செய்தால் இப்படியெல்லாம் நடக்கும் என்பதுகூட எனக்குத் தெரியாது,

ஆனால் நீங்கள் சொல்வதால் நான் ஆண்டவனை நோக்கி மன்றாடுகிறேன் என்றார்.

பின்னர் அந்த துறவி மன்னருடைய அரசவைக்கு வந்து, அங்கு ஒரு மூலையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஒரு தெய்வத்தின் திருவுருவம் முன்பாக விளக்கேற்றி, ஆண்டவா, **இந்த நாட்டில் எல்லாரும் நன்றாக இருக்கவேண்டும்** என்று பிரார்த்தனை செய்து முடித்தார்.

அதைக் கேட்ட மன்னருக்கு சிறிது ஏமாற்றமாக இருந்தது. நான் துறவியிடம் ஒவ்வொருவருக்காகவும் பிரார்த்தனை பண்ணவேண்டும் என்று, எவ்வளவு விளக்கமாகச் சொன்னேன்,

ஆனால் அவரோ ஒரே வரியில் பிரார்த்தனையை முடித்துவிட்டாரே, இதற்காகவா நான் தனியாகப் போய் அவரிடம் இத்தனை விண்ணப்பங்களை வைத்தேன் என்று நினைத்து வருத்தப்பட்டார்.

மன்னர் முகத்தில் தெரிந்த கவலையைப் பார்த்த துறவி, சிரித்துக்கொண்டே, மன்னரே, நீர் உம் மனதில் என்ன நினைக்கின்றீர் என்பது புரிகிறது, உங்கள் அரண்மனை தோட்டத்திற்கு என்னை அழைத்துக்கொண்டுப் போங்கள் என்று சொன்னார்.

அங்கு இருவரும் சென்றனர். அந்த அழகான தோட்டத்தில் வண்ண வண்ண மலர்கள் பூத்துக்குலுங்கின.

ஆனால், அந்த தோட்டத்தில், ஒரு செடி மட்டும் நீர் ஊற்றி இரண்டு நாள்கள் ஆனது போல் வாடி வதங்கி இருந்தது.

உடனே துறவி மன்னரிடம், கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரச் சொல்லுங்கள் என்றார்.

உடனடியாக கொண்டுவரப்பட்ட தண்ணீரை மன்னரிடம் கொடுத்து, அந்தச் செடிக்கு அதை ஊற்றச் சொன்னார்.

மன்னரும் அந்தச் செடியில் வாடி வதங்கியிருந்த இலைகள், உதிர்ந்துபோகும் நிலையிலிருந்த மலர்கள் மேல் ஊற்றாமல், மண்ணோடு உறுதியாக நிற்கக்கூடிய வேர்ப் பகுதியில் ஊற்றினார்.

அதைப் பார்த்த துறவி மன்னரிடம், வாடிப் போயிருக்கும் மற்ற பகுதிகளுக்கு ஊற்றாமல், வேர்ப் பகுதிக்கு, எதற்காக ஊற்றினீர்கள் என்று கேட்டார்.

அதற்கு மன்னர், வேர்ப் பகுதிக்கு ஊற்றினால், அது மற்றப் பகுதிக்கும் தானாகவே போய்விடும்தானே என்றார்.

அப்போது துறவி சிரித்துக்கொண்டே, எல்லாருக்கும் சேர்த்து நான் பண்ணிய பிரார்த்தனை, போகவேண்டிய இடத்திற்கு எல்லாம் போய்ச் சேரும்தானே என்று பதிலுக்குக் கேட்டார்.

இந்த கதையை வாசித்தபோது, எல்லா உயிர்களும் இன்புற்றிருப்பதேயல்லால் வேறொன்று அறியேன் பராபரமே என்ற தாயுமானவரது வரிகள் நினைவுக்கு வந்தன.

"மிகுந்த அன்பால் என்னை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று மாணிக்கவாசகர் வேண்டுகிறார். (வேண்டும் என்பது கருத்து)

"வேண்டும் வேண்டும் மெய்யடியார்
  உள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர்களைந்த
  அமுதே அருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடர் அனையாய்
  தொண்டனேற்கும் உண்டாம்கொல்
வேண்டாது ஒன்றும் வேண்டாது
  மிக்க அன்பே மேவுதலே."  (திருவாச.பா.488)

அடியேனது துன்பத்தைப் போக்கிய அமுதமே! அரிய பெரிய மாணிக்கமே! தூண்டாது இருக்கவும், தானே சுடர்விட்டு எரியும் விளக்கின் ஒளி போன்றவனே!

தன்னை மிகுதியும் விரும்பி நின்ற உண்மை அடியார்களுக்கு நடுவே, என்னையும் விரும்பி ஆட்கொண்டாய்.

இப்பொழுதுகூட விரும்பத்தகாத எதையும் நான் விரும்பவில்லை. மிகுந்த அன்பால் என்னை நீ பொருந்தும் அது உண்டோ? (வேண்டும் என்பது கருத்து)

இறைநிலையே நானாக இருக்கிறது என்பது வேதாத்திரியம்.

"நானே ஈசன்" சொல் விடுத்து,
  "நற்பொருளான ஈஸ்வரனே"
நானுமாக இருக்கின்றான்.

"ஞாலம் உயிர்கள் அனைத்து மவன்."
நான் இவ்வுண்மை உணர்ந்த பயன்
நல்லுலகுக்கே எனை ஈந்தேன்.
நானினித் தூயன் என நின்று,
நற்றொண்டாற்றி இன்புறுவீர்!" (ஞாக.பா..1599)

நானே ஈசன் என்று ஒரு மனிதர் கூறினார் என்றால், இவர் மட்டுமே கடவுள் என்று கூறுவதாகப் பொருள்படும்.

அதனால் இம்மனிதருக்குத் தன்முனைப்பும் எழுச்சியுறும். ஆகவே நானே கடவுள் எனக் கூறுவதை விடுத்து மேன்மையான மெய்ப்பொருளான, உயிர்களில் கலப்புற்றுள்ள ஈஸ்வரனே, நானுமாக ஆகியுள்ளான் என்று கூறும்போது தன்முனைப்பு எழாது.

உலகம், உயிர்கள் அனைத்திலும் இறைநிலையே இருந்து. காத்து, முடித்தும் வைக்கிறது என்ற உண்மையை நான் உணர்ந்து கொண்டதன் பயனாகவே, என்னை உலக நலத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டேன்.

நான் ஆன்மக் களங்கங்களிலிருந்து விடுபட்டு தூய்மையானவனாக உள்ளேன் என்று உள்ள உறுதியுடன், நல்முறையில் தொண்டு செய்து இன்புறுவீர்களாக!

உயிர்கள் அனைத்திலும் கலப்புற்றுள்ள இறைநிலை என் உள்ளும் புறமுமாகவும் இருக்கிறது என்ற உண்மை உணர்வில் தன்முனைப்பு இல்லாமல் தொண்டு செய்து இனிது வாழ்வோம்.

## 6. தன்முனைப்பு நீங்க தவம் ஒன்றே வழி.

நமக்கோ, நமக்கு வேண்டியவர்களின் உடல் நலம் வேண்டி, பணம் வேண்டி, பிரச்சனை தீர வேண்டி, பிள்ளைகளுக்கு நல்ல வேலை வேண்டி, நல்ல வரன் வேண்டி இப்படி பலப் பல காரணங்களுக்காக இறைவனை நினைகின்றோம்.

அது பக்தி அல்ல. 'ஒருமையுடன்' ஒரே சிந்தனையுடன் அவனது மலரடி நினைப்பவர் உறவு வேண்டும்." என்ற வள்ளலார் பிரார்த்தனை செய்கிறார்.)

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள் ஒன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேச வேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்

பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான பேய்
  பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்கவே வேண்டும் உனை
  மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணைநிதி வேண்டும் நோயற்ற
  வாழ்வில் நான் வாழ வேண்டும்." (திருஅருட்பா)

வாயொன்று சொல்லும், மனம் ஒன்று நினைக்கும் மனிதர்கள் தான் இங்கு அதிகம்.

உள்ளும் புறமும் வேறாய் இருக்கும் வஞ்சகர்கள் அவர்களாக வந்து நம்மோடு கலந்து விடுவார்கள். நாம் அவர்களை தேடி போவது இல்லை.

நாம் அறியாமல் நடப்பது. எனவே, வள்ளலார், அது போன்ற மனிதர்களின் உறவு கலவாமை வேண்டும் என்று வேண்டுகிறார்.

இறைவனின் பெயரை சொல்லிக்கொண்டே கொள்ளை அடிப்போர் உண்டு. எனவே, உன் புகழையும் பேசவேண்டும், பொய் பேசாமல் இருக்க வேண்டும் என்று இரண்டையும் வேண்டுகிறார்.

மனிதனுக்கு மதம் பிடிக்காமல் இருக்க வேண்டும். இறைவனின் பெயரால், மதத்தின் பெயரால், எத்தனை போர்கள், எத்தனை உயிர் பலி...அதை கண்டு வருந்தி "மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்" என்று வேண்டுகிறார்

கட்டி அணைக்கும் பெண் ஆசையை மறக்க வேண்டும் என்கிறார். ஞாபகம் இருந்தால் மீண்டும் வேண்டும் என்று தோன்றும். மறந்துறணும். எப்போதும் இறைவனை மறவாது இருக்க வேண்டும்.

நல்ல புத்தி வேண்டும். நல்ல புத்தி இருந்தாலும் அது தவறான வழியில் செல்லாமல் இருக்க இறைவனின் அருள் வேண்டும். நோயற்ற வாழ்வு வேண்டும்.

குளிர்ந்த (தண்) முகத்தை உடைய, தூய்மையான மணிகளில் சிறந்த மணியான சைவ மணியே, சண்முகத் தெய்வ மணியே எனக்கு நீ இதை எல்லாம் அருள வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறார்

"உன்னுடைய பேரருளால் மீண்டும் உனது பழைய பேரின்பக் கடலில் பொருந்தி இருத்தல் வேண்டும்" என்று மாணிக்கவாசகர் இப்பாடலில் பிரார்த்தனை செய்கிறார்.

"மேவும் உன்தன் அடியாருள்
   விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேரும் கயல்கண்ணாள்

பங்கா உன்தன் கருணையினால்
பாவி யேற்கும் உண்டாமோ?
பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்து
ஆவி யாக்கை யான் எனது என்று
யாதும் இன்றி அறுதலே.” (திருவாச.பா.489)

குவளை மலரின் நிறத்தையும் கயல்மீனின் வடிவத்தையும் கொண்ட கண்களை உடைய உமையின் பாகனே!

நானும் உன்னோடு கூடி இருக்கும் அடியார் நடுவில் இருக்கும் உண்மை நிலையையே விரும்புகிறேன்.

உன்னுடைய பேரருளால் மீண்டும் உனது பழைய பேரின்பக் கடலில் பொருந்தி இருத்தலும், உயிர், உடல் யான் எனது என்னும் பற்றுகள், ஆகிய எதுவும் இல்லாத நிலையும். பாவியாகிய எனக்கும் உண்டோ?” என வேண்டுகிறார் மாணிக்கவாசகர்.

”யான் எனது என்னும் பற்றுகள், ஆகிய எதுவும் இல்லாத நிலையும். பாவியாகிய எனக்கும் உண்டோ?” என்று கேட்ட மாணிக்கவாசகருக்கு, உண்டு என்று பதில் சொல்கிறது வேதாத்திரியம். எப்படி? தான் தனது என்று பற்று ஒழிய தவம் ஒன்றே வழி எனச் சொல்கிறது வேதாத்திரியம்.

”தன்முனைப்பால் ”தான்தனது” எனும் கருத்தில்
தன்னையே புலன்மயக்கால் எல்லை கட்டி
தன்னையே துன்பத்துள் சிக்க வைத்துத்
தவிக்குங்கால் கடைத்தேற எண்ணும் போது,
தன்முனைப்புக் காதியாய் அமர்ந்த உண்மை,
தழைத்தோங்கி எழும்போக்கே ஆன்ம நோக்கமாம்
தன்முனைப்புத் தணிந்து, மெய்யுணர்வாய் மாறத்
தவம் ஒன்றேவழி. அதற்கு அரண்ஆம்.!” (ஞாக.பா..1585)

”தான்” என்பது அதிகாரப் பற்று ஆகும். தனது உடலைவே ”நான்” என்று கருதிக் கொண்டதால், உடல் மீது ஏற்பட்ட பற்று, தன்னையே முன்வைத்து, மற்றவர்களை அடக்கி ஆளும் மனநிலை அதிகாரப் பற்று ஆகும்.

”தனது” என்பது அழிந்து போகக்கூடிய உடலைச் சார்ந்த சேர்ந்த பொருள் பற்றும், மக்கள் பாசமும் ஆகும்.

புலன் மயக்கத்தால் அறிவானது உடலையே எல்லைகட்டிக் கொண்டு இயங்கும்போது, தன்னைத் துன்பத்தில் சிக் வைத்துக் கொண்டு தவிக்கிறது.

துன்பத்திலிருந்து விடுபட்டு முன்னேற வேண்டும் என்று எண்ணுகிறபோது, தன்முனைப்புக்கு முன்னதாக ஆதி நிலையாக அமர்ந்த உண்மை உணர்வானது, மேலும் மேலும் உயர்வடைந்து தழைத்து எழும் போக்கே ஆன்ம நோக்கம் ஆகும்.

தன்முனைப்பானது குறைந்து, உண்மை உணர்வான இறை முனைபாக மாறுவதற்கு அகத்தவதம்தான் வழி ஆகும்.

இறைமுனைப்பிற்குப் பாதுகாப்பாக இருப்பதும் அகத்தவமே ஆகும். அறிவானது அகம் நோக்கி அழியாப் பொருளாகிய ஆன்மாவை உணர்வதற்கு வழி அகத்தவமே ஆகும்.

## 7. இறைநிலையை உணரக்கூடிய பேரறிவுதான் பிரம்மஞானம்

கடவுளிடம் என்ன கேட்க வேண்டும்!

நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்பதை மறந்து விட்டதால் கடவுளிடம் அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கின்றோம். இதுவே அறியாமையாகும்..

நாம் உண்மையான ஒழுக்கமுள்ள குழந்தைகளாக, மனிதர்களாக வாழ்ந்தால் நமக்கு என்ன தரவேண்டும் என்பது கடவுளுக்குத் தெரியும்.

எல்லோரும் பொருள் இருந்தால்தான் மகிழ்ச்சி என்று நினைத்துக் கொண்டு உள்ளார்கள் .அதனால் பொருளையே விரும்புகிறார்கள் .பொருள் இருந்தால் பொன்னையும், பெண்ணையும் மண்ணையும் தான் வாங்க முடியும்.

மனிதர்களை அழித்துக் கொண்டு இருப்பது மண்ணாசை பெண்ணாசை ,பொன்னாசை ,என்பதாகும்.

துறவிகள் என்பவர்கள் இந்த மூன்று ஆசைகளையும் விட்டு விட்டால் கடவுள் நமக்கு அருளைக் கொடுத்தது விடுவார் என்று நினைந்து கொண்டு மனித நடமாட்டம் இல்லாத காடு,மலை,குகை போன்ற இடங்களுக்கு சென்று தவம் கிடந்தார்கள் .அவர்களுக்கு கடவுள் எந்த விதமான நன்மைகளையும் செய்யவில்லை.

வள்ளார் முன்பு கடவுள் தோன்றி என்ன வேண்டும் என்று கேட்கிறார்.

வள்ளல்பெருமான் அவர்கள் கடவுள் இடத்தில் தனக்காக எதையும் கேட்கவில்லை ,எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும் .கொல்லா நெறியே குவலயம் எல்லாம் ஓங்க வேண்டும்,அதை

நீங்கள்தான் செய்ய வேண்டும் என்று மட்டும் கேட்கின்றார் .

.

மனிதனாக பிறந்த அறிவுள்ள ஜீவர்கள் கடவுளிடம்,என்ன எப்படி எதைக் கேட்கவேண்டும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் .நமது தாயாகவும் தந்தையாகவும் உள்ள ஆண்டவரிடம்

அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்
  ஆருயிர்கட் எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
  என்தந்தை நினது அருட்புகழை இயம்பி இட்டால் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்த சிவ மார்க்கம்
  திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செய்யுனும் நீ பொறுத்தல் வேண்டும்
  தலைவா நினை பிரியாத நிலையும் வேண்டுவனே!

என்னும் பாடல் வாயிலாக ஆண்டவரிடத்தில் எப்படி வேண்டுதல் செய்ய வேண்டும் என்பதை மனிதர்களுக்கு சொல்லிக் கொடுத்துள்ளார் .அப்படி வேண்டினால் நமக்கு என்ன வேண்டும் என்பதை அவரே தந்து அருள் புரிவார்.

வள்ளலார் ”ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்ய வேண்டும்” என்று பிரர்த்தனை செய்கிறார். மாணிக்கவாசகரும் இறைவனின் அன்பை வேண்டி பிரார்த்தனை செய்கிறார்.

”அறவே பெற்றார் நின்னன்பர்
  அந்தமின்றி அகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
  புலம்பு கின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
  பேரா ஒழியாய் பிரிவில்லா
மறவா நினையா அளவில்லா
  மாளா இன்ப மாகடலே.” (திருவாச.பா.490)

“எம்மை அடிமையாக உடையவனே! நிலை பெயராத, தீராத, விட்டு நீங்காத, மறக்கவும் நினைக்கவும் முடியாது.

அளவற்ற, தெலையாத பேரின்பமாகிய பெரிய கடலே! நின்னுடைய அடியார்கள் அனைவரும், முடிவின்றி, தொடர்ந்து உள்ளம் உருக நிற்கும், தன்மையை முழுமையாகப் பெற்று விட்டார்கள்.

புலாலை பெரிதும் விரும்பி உண்ணும் நாய் போன்ற கடையனேன், வெளியே நின்று புலம்புகின்றேன். உன்னுடைய உண்மை அன்பை உறுதியாக நான் பெற்றே ஆக வேண்டும்.” என்று மாணிக்கவாசகர் பிரார்த்தனை செய்கிறார்.

இறைநிலையின் உண்மையான அன்பு பெறவேண்டும் எனில்..பேரறிவு என்ற பிரம்மஞானம் பெற வேண்டும் என வலியுறுத்துகிறது வேதாத்திரியம்.

"பேரியக்க மண்டலத்தைத் தத்துவங்கள்
பத்தாக விளங்கிக் கொள்வோம்.
பெரியசுமை மனதிலிருந்து இறங்கி விடும்!
மனம் அறிவாம்! சிவமு மாகும்!

ஓரியக்க மற்றநிலை வெட்டவெளி
இருப்பதுவே; ஆதி யாகும்.
உள்ளமைந்த ஆற்றலே உருண்டியங்கும்
விண்ணாகும். அதிலெ ழுந்த

நேரியக்க விரிவுஅலை, நெடுவெளியில்
கலப்புற வான் காந்த மாச்சு.
நிகழ்காந்தத் தன்மாற்றம் அழுத்தம், ஒலி
ஒளி, சுவையாம் மணம் மனம்ஆம்.

சீரியக்கச் சிறப்புகளை, விளைவுகளை,
உள்ளுணர்ந்தால் அதுமெய்ஞ் ஞானம்.
சிந்திப்போம், உணர்ந்திடுவோம், சேர்ந்திருப்போம்
இறைநிலையோ டென்றும் எங்கும்!" (ஞாக.பா.1674)

சுத்தவெளிதான் இறைநிலை. இதுவே தான் கடவுள் ஆகும். இறைநிலையானது எல்லாம் வல்ல பூரணப் பொருள்.

இதன் இயல்பான தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் அதற்குள்ளாகவே செறிவு ஏற்பட்டு மடிப்புகள் விழுந்து, அதன் சூந்தழுத்தும் ஆற்றலாலேயே மிக விரைவான தற்சுழற்சி பெற்ற நுண்துகள்தான் முதல்நிலை விண் எனும் பரமாணு.

இந்த நுண்ணணுக்களின் கூட்டங்களே பேரியக்க மண்டலத்தில் காணும் அனைத்துத் தோற்றங்களும் ஆகும்.

முதல் நிலை விண்களின் விரைவான தற்சுழற்சியானது அதைச் சுற்றியுள்ள தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலான இறைவெளியோடு உரசும் போது எழுகின்ற நுண் அலைகள் தான் காந்தம் எனும் நிழல் விண்கள்.

.
நிழல் விண்கள் இறைவெளியின் சூழ்ந்தழுத்தத்தைத் தாங்க முடியாமல் கரைந்து போகும் நிகழ்ச்சிகள் தான் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்பனவாகும்.

இறைவெளியானது முதல்விண், நிழல்விண், காந்தம், காந்தத் தன் மாற்ற நிலைகளான அழுத்தம் முதல் மனம் வரையிலான ஆறுவகை, இவற்றை மனதில் பதியவைத்துக் கொண்டு பிரபஞ்சத்தை எண்ணிப் பார்த்தால், ஆராய்ந்தால் பேரியக்க மண்டல தோற்றம் இயக்கம் விளைவுகள் அனைத்தும் விளங்கிவிடும்.

பரமாணு முதல் கொண்டு, எந்தப் பொருளும் இறைநிலையாகவே இருக்கும் காட்சி அறிவிற்கு உண்டாகும். எல்லா இடங்களிலும் எக்காலத்திலும் எல்லாப் பொருட்களிலும் இறைநிலையை உணரக்கூடிய பேரறிவுதான் பிரம்மஞானம் எனப்படுகின்றது..

## 8. பிரார்த்தனை வலிமை வாய்ந்தது.

மனமுருகி வேண்டினால் பலன் கிடைக்குமா? நிச்சயம் கிடைக்கும்.

உலகம் தழுவிய நடத்திய பெரும் விழாவில் தன் ஆராய்ச்சி கட்டு ரை பெருமையுடன் சமர்ப்பித்து விட்டு, காரில் தன் ஊரை நோக்கிப் புறப்பட்டார் அந்த மருத்துவர்.

வழியில் பெரும் பனிப்புயல் அவரால் காரை ஓட்ட முடியவில்லை.

ஒரு கிராமத்தை தாண்டியபொழுது, சாலை பல விரிவுகளாக பிரிந்தது.

வழிகாட்டிப் பலகையும் அந்தப் பனிப்புயலால் தூர வீசப்பட்டிருந்தது.

டாக்டருக்கு எந்த வழியில் செல்வது என்று புரியவில் லை. தெரியவில்லை.

இதுவாகத்தான் இருக்கும் என்று அவராகவே முடிவு செய்து கொண்டு, ஒரு வழியில் காரில் பயணித்தார்.

ஆனால் அந்த வழி ஆள் அரவமற்ற காட்டின் வழியே சென்றது. புயலும் அதிகமாக வீசியது. டாக்டருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஒதுங்க எந்த இடமும் இல்லை.

தூரத்தில் ஒரு சிறு வீடு தெரிந்தது. டாக்டர் அங்கே சென்று கதவைத் தட்டினார்.

ஒரு இளம் பெண் கதவைத் திறந்தார். அவர் இருந்த நிலையைப் பார்த்து உள்ளே அழைத்து அமரச் சொன்னார்.

ஏழ்மையான வீடு. வீட்டில் யாரும் இல்லை. இரண்டு வயது குழந்தை ஒன்று தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது.

அந்த பெண் அன்போடு சூடான தேநீர் ஒன்றை கொடுத்து அருந்தச் சொன்னார்.

பின் விசாரித்ததில் அவர் தவறான பாதையில் வந்ததை புரிந்து கொண்டு, இன்னும் சிறிது தூரம் சென்றால் ஒரு பிரிவு வரும்.

அங்கே வலது பக்கம் திரும்பி சிறிது தூ ரமை் சென்றால், நீங்கள் செல்ல வேண்டிய ஊரின் பிரதான சாலை வரும் என்று விளக்கினார்.

பனிப்புயல் குறையும் வரை ஓய்வெடுங்கள். நான் பிரார்த்தனை செய்து விட்டு வருகிறேன் என்று சொல்லி, அறையின் மறுபக்கத்தில் அமர்ந்து இறைவனை நோக்கி கண்ணீர் மல்க முணு முணுத்தாவாறு வெகு நேரம் பிரார்த்தி விட்டு, மீண்டும் டாக்டர் அருகில் வந்து அமர்ந்தார்.

என்ன பிரார்த்தனை செய்தீர்கள்? என்று டாக்டர் வினவினார்.

அந்தப் பெண் கண்ணீர் மல்க, தன் குழந்தையை காட்டி, அவனுக்கு தலையில் ஒரு பெரும் பிரச்சனை ***Brain nerves.***

சரியாக வேலை செய்யவில்லை. இதை சரி செய்வதென்றால் ஒரே ஒருவரால்தான் முடியும். பெரும் செலவாகும். என் ஏழ்மை நிலையில் கடவுளிடம் பிரார்த்திருப்பதை தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை என்று கூறி அழுதார்.

யார் அந்த டாக்டர்? என்று கேட்டார்.

புகழ் பெற்ற ***Neurosurgeon*** டாக்டர் சுப்பிரமணி என்று அந்த பெண் சொன்னவுடன், டாக்டர் அதிர்ந்துவிட்டார். அவர்தான் அந்த டாக்டர் சுப்பிரமணி.

அந்த எளிய பெண்ணின் பிராத்தனையே இறைவன் தன்னை அங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார் என்று உணர்ந்தார்.



பின் நடந்தது காவியம்.  அந்த பெண்ணையும், குழந்தையையும் தன் காரிலேயே அழைத்து சென்று சரியான மருத்துவம் செய்து குழந்தையை காப்பாற்றினார்.

பிரார்த்தனை வலிமை வாய்ந்தது.

நேர்மையான எண்ணங்கள், பிரபஞ்சத்தில் கலந்து, அந்த செயல் செய்வதற்கான சூழ்நிலையையும், தகுதியான நபரையும் தேர்ந்தேடுத்து, அந்த எண்ணத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும்.

"எண்ணம் எழும் இடமோ
சிறு புள்ளி"
விரிந்து முடியும் இடமோ
விரிந்த உலகம்!"

இறையுணர்வு பெறாத தன்னுடைய அறியாமை அறுத்து எறிய வேண்டும் என்று மாணிக்கவாசகர் இப்பாடலில் பிரார்த்தனை செய்கிறார்.

"கடலே அனைய ஆனந்தம்
  கண்டார் எல்லாம் கவர்ந்து உண்ண
இடரே பெருக்கி ஏசற்று இங்கே
  இருத்தல் அழகோ அடிநாயேன்
உடையாய் நீயே அருளிதி என்று
  உணர்த்தாது ஒழிந்தே கழிந்து ஒழிந்தேன்
சுடரார் அருளால் இருள்நீங்கச்
  சோதி இனித்தான் துணியாயே. " (திருவாச.பா.491)

என்னை அடிமையாக உடையவனே! கடல்போல் பெருகும் நினது இன்பத்தைக் கண்ட அடியார்கள் அனைவரும் அதனை வலிதில் பெற்று அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

நாயினும் கடையனாகிய நான், துன்பத்தைப் பெருக்கிக் கொண்டு, இங்கு வருந்தித் திரிந்து கொண்டு இருத்தல் அழகாகுமோ?

உன்னைக் கண்டு. "எனக்கும் அருள வேண்டும்" என்று நீ உணருமாறு கூறிக் கேளாது, வீணே காலம் கழித்துக் கொண்டு இருக்கிறேன் – என மாணிக்கவாசகர் பிரார்த்தனை செய்கிறார்.

ரிக் வேதாத்தில் ஸம்ஹிதையில் ஒரு சுலோகம். போற்றுதற்கரிய பெரிய பொருளே. எங்களது மேலான தளையை வெட்டிக் களைக. இடைத்தரமான தளையைப் பாழாக்கும் கடைத்தரமான தளையை அகற்றுக.

நிலைபேறுடைய பொருளே! உனது அயைால் பாபவங்களை அனைத்தினன்று விடுபட்டுள்ள நாங்கள் உலப்பிலா ஆனந்தத்தை அனுபவிப்போம் என்று சொல்கிறது.

”உத் உத்தமம் வருண பாசம் அஸ்மத்“<br>
  அவ அதமம் விமைத்யம் ச்ரதாய!<br>
அத ஆதித்ய ப்ரூதே வயன் தவ அனாகஸோ<br>
  அதிதயே ஸ்யாம!! (ரிக் வேத ஸம்ஹிதை)

மேலாய தளையானது அத்யாத்மிக பாசம் எனப்படுகிறது. மனிதன் தனக்குத்தானே உண்டு பண்ணிக் கொள்ளும் பந்தம் மிகக் கொடியது.

விவேகம் என்னும் வாளைக் கொண்டு அதை வெட்டித் தள்ள வேண்டும்.

ஆதி தெய்விக பாசம் இடைத்தரமான தளையாகிறது. இயற்கையின் நடைமுறைக்கு அல்லது தெய்வ சங்கல்பத்துக்கு மாறுபடுவதால் அது உண்டாகிறது.

பொருத்தமான கால-தேச-நிமித்தத்தைக் கொண்டு அதைத் தவிர்க்கலாம்.

ஆதி பௌதிக பாசம் கடைத்தரமான தளையாகிறது. பிரதிகூலமான சூழ்நிலை அதற்குக் காரணமாகிறது. சூழ்நிலையைத் திருத்தியமைப்பதால் அத்தகைய தளையைக் கலைக்கலாம்.

அருளைச் சார்ந்துள்ள முயற்சியால் மூன்று விதப் பாசங்களையும் போக்கலாம். பிராத்தனையே அதற்கு உற்ற வழியாகிறது.

சோதியே! உன்னுடைய ஒளி உடைய திருவருளாகிய வாளினால் என் அறியாமை ஆகிய இருள் அறுபடுமாறு இனியாவது வெட்டிச் சாய்ப்பாயாக! என்று மாணிக்கவாசகர் பிரார்த்தனை செய்கிறார்.

**மாணிக்கவாசகர் கேட்கும் இறையருள் வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?**

**மனம் சுழலாமல் அலைபாயாமல், வெட்டவெளியில் திளைத்திருக்க என்ன செய்ய வேண்டும்? வேதாத்திரியம் வழி காட்டுகிறது,**

**"அகத்தவத்தால் மனச்சுழலைப் படிப்படியாய்க் குறைத்து**
**ஆதிநிலை ஒன்றுவரை பழக்கமாக்கிக் கொண்டால்,**
**இகத்துணர்வோடு எல்லையிலா இறைநிலையும் உணர**
**ஏற்றபடி அவ்வப் போ பொருந்திவரக் காண்போம்.**
**மிகத் தெளிவும் உள்ளுணர்வு ம முற்றறிவும் கிட்டும்.**
**மூலம் எனும் இறைமுதலாய் மனிதன்வரை வந்த**
**மகத்துவமாம், முத்தரமே முத்திறமாய் மலர்ந்த**
**மறைபொருளை அறிவுணரும், பிரம்மஞானம் கிட்டும்"**
**(ஞாக.பா.1446)**

**மனம் என்பது மனிதனின் அனுபோக அனுபவங்களுடன் கூடிய ஜிவகாந்த அலை ஆகும். இதனை மன அலைச்சுழல் என்கிறோம்.**

**மன அலைச்சுழல் வேகம் ஒரு விநாடிக்கு ஒன்று முதல் நாற்பது வரை இயக்கமாகிறது.**

**ஒன்றிற்கு குறைந்தாலும் நாற்பது சுழல்களுக்கு மேல் அதிகமானலும் உயிரானது உடலை விட்டு அகன்றுவிடும். இயக்கம் நின்றுவிடும்.**

**சாதாரணமாக புலன்கள் மூலம் இயங்கும்போது பதினாறு முதல் நாற்பது வரை சுழல் வேகம் உள்ளது.**

**உயிர்மேல் மனம் செலுத்தும் குண்டலினயோகம் என்னும் அகத்தவத்தினை இயற்றி, மன அலைச்சுழல் வேகத்தைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டு வந்து,**

**ஆதி நிலையாகிய இறைநிலையில் நிறுத்தி பழகிக் கொண்டு விட்டோமேயானால்,**

**நில உலக வாழ்வில் கடமைகளை ஆற்றும்போதும் இறைஉணர்விலேயே செயல்படக்கூடிய தகைமை கிட்டும்.**

**எந்தப் பொருளோடும் எந்த உயிரோடும் தொடர்பு கொள்ளும்போது பிணக்கின்றி, இணக்கத்துடன் வாழமுடியும்.**

அறிவில் தெளிவும், முற்றறிவும், உள்ளுணர்வும் கிட்டுவதே அதற்குக் காரணம் ஆகும்.

தோற்றங்களுக்கொல்லாம் மூலமாகவும் ஆதியாகவும் உள்ள மெய்ப்பொருளே மனிதன் வரை தன் மாற்றம் அடைந்து,

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு எனும் முத்தரமே, தன்மாற்றம், இயல்பூக்கம், கூர்தலறம் எனும் முத்திறமாக மலர்ச்சி பெற்றுள்ளது

என்ற மறைபொருளை அறிவை உணர்ந்து கொள்ளும் பிரம்மஞானம் என்னும் இறையுணர்வு கிட்டும்.

## 9.மனம் ஒரு வியப்புக்குரிய இயக்கம்

ரஷ்யாவில் மூன்று குருமார்கள் திடீரென மக்களிடையே பிரபலம் ஆயினர். ரஷ்யாவின் புகழ்பெற்ற மதகுருவுக்கு அந்த மூன்று துறவிகள் மீதும் பொறாமையும் கோபமும் ஏற்பட்டது.

அவர் அந்த மூன்று துறவிகளையும் பார்ப்பதற்காக அவர்கள் வசிக்கும் கிராமத்திற்குப் படகில் சென்றார்.

அந்தத் துறவிகள் வசித்த கிராமம் ஒரு ஏரியின் கரையில் இருந்தது. ஏரியைக் கடந்து கரையில் இறங்கினார் மதகுரு.



திடீர் பிரபலமடைந்த மூன்று துறவிகளும் ஒரு மரத்தின் அடியில் அமர்ந்திருந்தனர்.

குடியானவர்களைப் போல எளிமையாக அவர்கள் இருந்தனர். மதகுருவைப் பார்த்தவுடன் எழுந்து பயபக்தியுடன் அவரது காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார்கள். இதைக் கண்டு மதகுருவுக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

“இவர்கள் நான் நினைத்து வந்தது போல அபாயகரமானவர்கள் அல்ல. இவர்களைத் திருத்திவிடலாம்.” என்று எண்ணி அவர்கள் எப்படி துறவிகளாக மாறினார்கள் என்று கேட்டார்.

“எங்களுக்குத் தெரியாது. எங்களைத் துறவிகள் என்று சொல்லமுடியுமா என்றும் தெரியவில்லை.

மக்கள் எங்களை அப்படி அழைக்கிறார்கள். நாங்கள் துறவிகள் அல்ல, எங்களை அப்படி அழைக்க வேண்டாம் என்றுதான் அவர்களிடம் சொல்கிறோம்.

நாங்கள் அவர்களிடம் சொல்லச் சொல்ல அவர்கள் எங்களைக் கூடுதலாக வழிபடுகிறார்கள். அதனால் நாங்கள் அவர்களிடம் பேசுவதைக்கூட விட்டுவிட்டோம்” என்றனர்.

மதகுரு மேலும் சந்தோஷமடைந்தார். “உங்களது பிரார்த்தனை என்ன? எப்படி பிரார்த்தனை செய்வது என்று தெரியுமா?” என்று கேட்டார்.

மூன்று பேரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர்.

“உண்மையிலேயே சொல்லவேண்டுமெனில், எங்களுக்கு எந்தப் பிரார்த்தனையும் செய்யத் தெரியாது. சொல்வதற்கே சங்கடமாக இருக்கிறது. ஆனாலும் நீங்கள் கேட்பதால் சொல்கிறோம். நாங்களே ஒரு பிரார்த்தனை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறோம்.

தந்தை, மகன் மற்றும் தூய ஆவியாக ஒரே கடவுள் இருக்கிறார் என்று எங்களுக்கு சொல்லப்பட்டது. நாங்கள் மூன்று பேராக உள்ளோம். கடவுளும் மூன்றாக உள்ளார்.

அதை வைத்து நாங்கள் ஒரு பிரார்த்தனை மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கினோம். ‘ நீங்களும் மூவர். நாங்களும் மூவர். எங்கள் மீது கருணை காண்பியும்’. இதுவே எங்கள் பிரார்த்தனை” என்றனர்.

அந்த மதகுரு அந்த மூன்று பேரையும் பார்த்து எரிச்சல் அடைந்தார். “இது என்ன முட்டாள்தனம். இது ஒரு பிரார்த்தனையா? நான் உங்களுக்கு சரியான பிரார்த்தனை முறையைச் சொல்லித் தருகிறேன்” என்றார்.

அவர்களும் அவரிடம் திரும்பத் திரும்ப மூன்று முறை கேட்டு பிரார்த்தனையைக் கற்றுக்கொண்டனர்.

மதகுரு மிகவும் திருப்தியாக தனது படகில் ஏறினார். ஏரியின் நடுவில் அவர் ஒரு காட்சியைக் கண்டார். படகோட்டியின் கண்களிலும்

வியப்பு. அவரிடம் பிரார்த்தனையைக் கற்றுக்கொண்ட மூன்றுபேரும் தண்ணீரின் மேல் படகை நோக்கி ஓடிவந்தனர்.

மதகுருவின் படகு நின்றது. அவர்கள் மதகுருவிடம், “தயவுசெய்து எங்களுக்கு உங்கள் ஜெபத்தை இன்னும் ஒரே ஒரு முறை கற்றுக்கொடுங்கள். எங்களுக்கு மறந்துபோய்விட்டது” என்று கேட்டனர்.

மதகுரு வியப்பில் ஆழ்ந்தார். அவர் அந்த மூன்று மனிதர்களின் பாதம் தொட்டு வணங்கினார். “நான் என்ன சொல்லிக்கொடுத்தேனோ தயவுசெய்து அதை மறந்துவிடுங்கள்.
உங்கள் பிரார்த்தனை ஏற்கெனவே கேட்கப்பட்டுவிட்டது.

எனது பிரார்த்தனைதான் இதுவரை கேட்கப்படவேயில்லை. நீங்கள் உங்கள் முறையிலேயே கடவுளைத் தொழுங்கள். என்னை மன்னியுங்கள்” என்றார்.

”துணியா உருகா அருள்பெருகத்
  தோன்றும் தொண்டரிடைப்புகுந்து
திணியார் மூங்கில் சிந்தையேன்
  சிவனே நின்று தேய்கின்றேன்
அணியார் அடியார் உனக்குள்ள
  அன்பும் தாராய் அருள் அளியத்
தணியாது ஒல்லை வந்தருளித்
  தளிர்ப்பொற் பாதம் தாராயே.”  (திருவாச.பா.492)

சிவபெருமானே! உன்னையே ஆதரவாகக் கொண்ட, துணிந்து மனம் உருகவம், அருள் பெருகவும், நிற்கும் அடியார்களுக்கு நடுவே நான் இருந்தும்கூட, வலிமை உடைய வளையாத மூங்கில் போன்ற மனம் உடையவனாய் இருந்து, துன்பத்  தால சோர்வு அடைகிறேன். உனது அழகிய அடியார்கள், உன்பால் வைத்துள்ள அன்பை, நீ எனக்குத் தருதல் வேண்டும்.

இனியும் தாமதம் செய்யாது, விரைந்து வந்து. நின்னுடைய அருளானது கனிய, தளிர் போன்ற நினது பொன்னடிகளைத் தந்து அருளுவாயாக! – என பிரார்த்தனை செய்கிறார் மாணிக்கவாகசர்.

”மூங்கில் போன்ற மனம் உடையவனாய் இருந்து, துன்பத்தால சோர்வு அடைகிறேன்” என வருந்துகிறார் மாணிக்கவாசர். “மனதைப் பற்றி

தெரிந்து கொண்டால் பிரபஞ்ச இரகசியங்கள் விளங்கிவிடும்” என்பது வேதாத்திரியம்.

இறைநிலையின் அலையே மனம். அது மனிதனிடம் முழுமையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இறைநிலை எங்கும் வியாபித்து இருப்பதால் அதிலிருந்து எழும் அலையான மனமும் எங்கும் சென்று எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற்றது.

எனவேதான் சுவாமி விவேகானந்தர், “மனம் என்ற புத்தகத்தை அறிந்தவனுக்கு வேறு புத்தகங்கள் தேவையில்லை” என்கிறார்.

“மனதைப் பற்றி தெரிந்து கொண்டால் பிரபஞ்ச இரகசியங்கள் விளங்கிவிடும்” என்பார் வேதாத்திரி மகரிஷி.

எனவே அவர் மனவளக்கலை என்கிற எளியமுறைக் குண்டலினி யோகப் பயிற்சிகளை அமைத்துக் கொடுத்தார்.

மனம் என்ற கருவியின் மூலமே நம் முன்னோர்கள் அனைத்து இரகசியங்களையும் அறிந்து உலகிற்குச் சொன்னார்கள்.

உலகில் மிகவும் தொன்மையானதும் பழமையானதுமான ஞானம் இந்தியத் தத்துவஞானம்.

இதனையே மெய்ஞ்ஞானம் என்று நாம் தமிழில் வழங்குகிறோம். அந்த மெய்ஞ்ஞானத்தை அறிவதற்கு உதவியது மனித மனம்.

எனவேதான் “மனித மனதிற்குள் அடங்காதது ஏதுமில்லை” என்று கூறுகிறார் வேதாத்திரி மகரிஷி.

இறையுணர்வு பெறும் ஆற்றல் எல்லாருக்கும் உண்டு :

.

"அறிவு ஒரு மறை பொருள். அதைக் கொண்டு தான் பேரியக்க மண்டலப் பொதுவான மறைபொருள் தெய்வ நிலையை உணர முடியும். எந்த இயக்கமானாலும் இருப்பு நிலையில்தான் மோதவேண்டும்.

அதில்தான் முடியவும் வேண்டும். இங்கே உணர்ந்து கொள்வது எது? அலையாக இயங்கி மோதுவதா? அல்லது இருப்பாக இருந்து தாங்குவதா? இருப்புதான் உணர்கிறது.

எல்லாத் தோற்றங்களிலுள்ள இயக்க அலையை எங்கும் நிறைவாயுள்ள நிலைபொருள் இருப்பு நிலை - இறைவெளிதான் உணர்வாகப் பெறுகிறது.

ஆகவே இறைவெளியான இருப்பு நிலை பேரறிவு - (Super Consciousness) எனவும் அகண்டாகாரமாக அது நிறைந்திருப்பதால் (Cosmic - consciousness) வாணறிவு எனவும் போற்றப்படுகிறது.

.

அறிவுதான் நான் என்னும் பொருளாக உள்ளது என்றும் அதுதான் இருப்பு நிலையாக தெய்வமாகவும் உள்ளது என்றும் உணரும் பெரும் பேறு மனிதனுக்குக் கிட்டிவிட்டால் அவன் தெய்வமாகவே திகழும் பெருமையுடையவனாகிறான்.

ஆதி முதல் அணுவரையில் அவனேயாகி அனைத்திலும் அவனே நிறைந்த பொருளாக இருப்பதால் அறிவே தான் நான் என்று உணர்ந்து அதுவே தெய்வமாகவும் இருக்கிறது என்ற பேரறிவில் அவன் எல்லாம் உணரும் ஆற்றல் பெற்றவனாகிறான். இதனை அறிவறிந்த பெரியார் 'வள்ளுவப்' பெருந்தகை

.

"ஐயப்படாது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்".
என்ற கவி மூலம் விளக்கியிருக்கிறார்.

.

இந்தப் பேரறிவில் விழிப்போடு இருப்பவர்களுக்கு எதைப் பற்றி நினைத்தாலும் அதிலிருந்து வரும் விளக்கம் இறைவனே பேசுவது போல இருக்கும்.

இந்த மனநிலையில்தான் முழுமையான அமைதி மனிதனுக்குக் கிட்டும். அறிவை அறியும் வரை அது குறையுடையதாகவே இருக்கும்.

அந்த நிலையில் பொருள், புகழ், அதிகாரம், புலனின்பம் என்ற நான்கில் தன்னை இணைத்துக் கொண்டு இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்ற குறையுடையதாகவே, வறுமை மிஞ்சியதாகவே இருக்கும். அறிவையறியும் ஆற்றல் அனைவரிடமும் உண்டு.

அதற்கு பயிற்சி வழி அகத்தவமும் (Simplified Kundalini Yoga), அறநெறி பற்றி வாழும் முறையும் ஆகும்.

.

## அகத்தவமும் அற வாழ்வும்".

"மறைபொருளாம் அறிவு சிவம் இரண்டும் ஒன்றாய் நானாய்
  மனிதன் தெய்வமாய்த் திகழும் மாபதம் பேறானால்,
இறையுணர்வால் தன்முனைப்புப் பேரறிவாய் மாறும்.
  எப்போதும் ஈசன் குரல் உள்ளுணர்வாய்க் கேட்கும்;
குறையறிவில் பொருட்கள், புகழ், புலன், இன்பம், இவற்றில்
  கொடிய வறுமை பெருகும். நிறைவு கிட்டா வாழ்வில்.
நிறைநிலையை எவரெனினும் முயற்சித்தால் பெறலாம்.

நேர்வழியோ அகத்தவமும் நிறைஅற வாழ்வாகும்". (ஞாக.பா.1671)

# 10.. இறைநிலை இன்பம்

**பிராத்தனையின் உண்மையான பொருள் என்ன?**

நீங்கள் இதுவரை செய்து வருகின்றன பிரார்த்தனை வெறும் போலி பல லட்சம் கோயில்களும் சர்ச்களும். இதைப் போன்ற மக்களைத்தான் தயாரித்து கொண்டும் இருக்கின்றன.

அவர்களது பிரார்த்தனை நிச்சயமாக உன்மையானது அல்ல.. ஏனெனில் இதில் ஏதாவது ஒரு வேண்டுகோள் இல்லாமல் இருக்காது.

இதுவரை அடைந்ததற்கு அவர்கள் ஒருபோதும் நன்றி சொல்ல மாட்டார்கள். அவர்கள் தங்கள் பிரார்த்தனையின் மூலம் தாங்கள் ஒரு பிச்சைக்காரன் இன்னும் சொல்லப் போனால்.
நன்றியற்ற பிச்சைக்காரன் என்று தெளிவுபடுத்திக் கொண்டே இருப்பார்கள்.

இந்த கீழ்த்தரமான நன்றி கெட்ட செயலை எல்லா மதத்தினரிடமும் பொதுவாகக் காணலாம். எதைப் பற்றியாவது ஒரு குறை, மிக அற்பமாக சொல்லிக்கொண்டு, சிறு குழந்தைகள் போல், எனக்கு அது வேண்டும். இது வேண்டும் என்று முறையிட்டுக் கொண்டே இருப்பார்கள்.

இவர்கள் வீணே தங்கள் நேரத்தை ஒன்றுக்கும் உதவாமல் செலவிடுகிறார்கள்.

அவர்களுக்கு பிரார்த்தனையின் உண்மையான அர்த்தம் கூட புரியவில்லை. அது வார்த்தையில் இல்லை. அவர்களே பிரார்த்தனை மயமாக உள்ளத்தை உணரவேண்டும்.

இயற்கையில் ஒவ்வொரு செயலுக்கும். உதாரணமாக மரம் பச்சை பசேல் என்று இருப்பதற்கும், மழை பொழிந்து.

இந்த பூமியின் தாகத்தைத் தீர்ப்பதற்கும், நீங்கள் மகிழ்ச்சியுடன் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

அந்தப் பேருந்தன்மை எல்லோருக்கும் வேண்டும் முதல் மழையில் நனையும் பூமி ஒரு வாசனையை வெளியே. அது அந்த பூமி இறைவனுக்கு செலுத்தும் நன்றி.

பிறகு மரங்கள் பசுமையாகி, பல லட்சம் பூக்களைப் பூப்பது, கனிகளை தருவது எல்லாம், அந்த பூமி செய்யும் நன்றி செயல்.

இதைப் போலத்தான் உங்கள் பிரார்த்தனையும் அமையவேண்டும். உங்கள் பிரார்த்தனை அன்பு மயமாகவும், நன்றி அறிவித்தலாகவும் இருக்க வேண்டும்.

இப்படிச் செய்து வந்தால், கொஞ்சம் கொஞ்சமாக மனிதன் முறை இடுதல், குறை சொல்லுதல் போன்றவற்றை மறந்துவிடுவான் பொறாமைப்படுதலை விட்டு விடுவான். அவன் முழுக்க நன்றியுடைய வனாக மாறும்பொழுது, தனக்கு அது வேண்டும், இது வேண்டும் என்பதையே மறந்து விடுவான்,

உங்களுக்குக் கிடைத்தவை அனைத்தும் நீங்கள் கேட்காமலே கிடைத்தவைதான்.

அவன் வெறும் வரவேற்பாளனாக மட்டும், தன் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தாலே போதும்,

அவள் அன்பு மயமாக, பிரார்த்தனை மயமாக வெறும்மனே இருந்தால் போதும்.

நீங்கள் எந்த அளவுக்கு பெருந்தன்மையாக இதுவரை கிடைத்தற்கு நன்றியுடையவர்களாக இருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு நீங்கள் மேலும் மேலும் இயற்கையின் அன்பளிப்பை வாங்கத் தகுதி படைத்தவர்களாவீர்கள்.

சுருக்கமாகச் சொன்னால் நீங்கள் கேட்காமலே, மேலும் மேலும் எல்லாம் உங்களை வந்தடையும்.

"பேரின்பத்தை நிலையாக என்னிடம் வைத்தருக்க வேண்டும் என

இப்பாடலில் மாணிக்கவாசகர் பிரார்த்தனை செய்கிறார்
பேரின்பத்தை நிலையாக வைத்திருக்க என்ன செய்ய வேண்டும்?
வேதாத்திரியம் விடையாக வருகிறது.

"தாரா அருள் ஒன்று இன்றியே
  தந்தாய் என்று உன் தமர் எல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
  அயலார் போல அயர்வேனோ?
சீரார் அருளால் சிந்தனையைத்
  திருத்தி ஆண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை
  வைக்க வேண்டும் பெருமானே." (திருவாச.பா.493)

நினது சிறப்பு பொருந்திய திருவருளால் என்னுடைய சிந்தனையைச் செப்பம் செய்து ஆட்கொண்ட சிவலோக நாதனே!

உன்னுடைய அடியார்கள், "எம் இறைவன் ஒன்றுகூட குறையாமல் எல்லா அருளையும் தந்துவிட்டான்" என்று இன்பம் அனுபவிக்கிறார்கள்.

ஆனால் அடியேன், நின் அருளுக்குப் புறம்பானவன் போல, அருளைப் பெறாது, சோர்வு அடைகிறேன்.

எம்பெருமானே! நினது பேரின்பத்தை (வீடு பேற்று இன்பத்தை) மீண்டும் பெயராத வகையில், என்னிடம் வைத்து அருள வேண்டும் என மாணிக்கவாசகர் வேண்டுகிறார்.

இறைவனை அறிவால் கண்டு கொண்டால், பேரின்பம் நிலையாக நம்மிடம் அமைந்துவிடும். எப்படி? வேதாத்திரியம் விடை தருகிறது.

## இறைநிலை இன்பம்

இறைவனைக் கண்டு கொண்டேன்! - அறிவாய்
இறைவனைக் காணுகின்றேன்! (இறைவனை)

குறைவின்றிக் குற்றமின்றிக் குணத்தில் உயர்அறிவாய்,
மறைபொருளாக உள்ள, மாபெரும் மெய்ப்பொருளாம். (இறைவனை)

அறிவின் உயர்நிலையில், அன்பும் கருணையுமாய்,
நெறியில் சிறந்த போது நீங்காத இன்ப ஊற்றாய்ப்,
பொறியெனும் புலனைந்தில் பொங்கு தன் மாத்திரையாய்ச்
சிறிதும் பெரிதுமாகிச் சிந்தனைக்கு ஊற்றான, (இறைவனை)

எங்கும், எக்காலத்தும், எல்லாப் பொருட்களூடும்,
தங்கித் தழைத்து ஓங்கித் தனை வெவ்வேறாகக் காட்டி,
பொங்கித் ததும்பி, இன்பப் பூரிப்பாய், நிறைந்துள்ள,
கங்குல் பகல் இரண்டின் காரணப் பொருளான, (இறைவனை)

ஆதிநிலை வெளியாய் அணுவோடு ஐம் பூதமாகி,
பேதித்த உயிர்களில், பிழையில்லா நெஞ்சமாய்,
வாதிக்க இடமின்றி, வளர் இயல்பூக்க மதாய்,
நீதிக்கு நிலைக் களனாக விளங்குகின்ற (இறைவனை)

உத்தம நண்பர்காள்! உங்கட்கும் உரியது!
சித்தம் எனும் உயிர்க்குள் சிறப்பாய் விளங்குவது,
முத்தர்கள் அறிவினில் முழுமையாய்த் திகழ்வது,
இத்தனை சிறப்போடும் எல்லார்க்குள்ளும் நிறைந்த” (இறைவனை)

(ஞாக.பா.1650)

<u>மாணிக்கவாசகரே இறைவனைக் கண்டு கொண்டதை ஒரு பாடலில் பதிவு செய்துள்ளார். திருமாலும்</u> <u>நான்முகனும்</u> தேடியும் காணாத <u>தேவாதி</u> <u>தேவனை</u> நான் என்னுள் தேடிக்கண்டு கொண்டேனே! சர்வ வல்லமை படைத்த <u>இறைவன்</u> நம் தலை நடுஉள்ளே துலங்குகிறான்!

இரு <u>கண்</u> வழிபுகுந்து உள்ளே நடுவிலே இருக்கும் இறைவனை காணலாம்.

தேடிக் கண்டு கொண்டேன் - திரு மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே தேடிக் கண்டுகொண்டேன்”
(திருவாச.பா.93)

## இறையுணர்வில் எழும் பேரின்பம்

"இன்ப ஊற்று  என நிறைந்த இறைவா" எனும் போதிலே
  ஏற்படும் ஓர் இன்பமதை எவ்வாறு சொல்வேன்?
நன்மை தரும் நவகோள்கள், நட்சத்திரக் கூட்டம்,
  நான் அகத்தே காணுகின்றேன் நடமாடும் காட்சியாய்!
உன் பெரிய, பேரியக்க, உவமையற்ற ஆற்றலால்,
  உலகங்கள் அத்தனையும் உருளுதே ஓர் கொத்துபோல்!
தனமயமாய்த் தான் அதுவாய்த் தவறிடாதியக்கும் உன்
  தன்மையினை எண்ண எண்ண, தவமது ஆனந்தமே" (ஞாக.பா.1652)

பேரியக்க மண்டலம் முழுவதும் நீக்கமற நிறைந்து எல்லா இயக்கங்களையும் திருவிளையாடலாக நிகழ்த்திக் கொண்டிருக்கும் வியத்தகு மறைபொருள் காந்தம்.

அந்தக் காந்தத்திற்கும் உட்பொருளாக இருப்பு நிலையாக அமர்ந்து, காந்தத் தன்மாற்றங்களாகிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்ற ஆறு விளைவுகளாகி உயிர்களுக்கெல்லாம் வாழ்க்கை இன்பத்தை வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கும் உன்னை "இன்ப ஊற்று என நிறைந்த இறைவா" என்னும்போது ஏற்படுகிற எனது இன்பப் பெருக்கை எவ்வாறு வார்த்தைகளால் சொல்வேன்?

விண்  துகள்களின் கூட்டாக பஞ்சபூதங்கள் இருந்தாலும், விண், வெளி என்ற இரண்டின் விகிதாசாரக் கூட்டுக்கேற்ப ஒவ்வொரு பௌதீகப் பிரிவும் காந்த அலையின் தன்மையில் வேறுபாடுகளைக் கொண்டுள்ளது.

அதற்கேற்ப காந்தத் தன்மாற்றத்தின் அளவும் விளைவுகளும் ஒவ்வொரு பௌதீகப் பிரிவிற்கும் வேறுபடுகிறது.

இதற்கு பௌதீகப் பிரவுகளைக் கூட்டாகப் பெற்று, சூரியனைச் சுற்றி இயங்கிக் கொண்டு இருக்கும் ஒன்பது கோள்களும் நில உலகில் வாழ்கின்ற உயிரினங்களுக்கு எல்லாம் வாழ்வின் இன்பத்திற்கு வேண்டிய அலைகளை ஓயாமல் வீசி நன்மை அளிக்கின்றன.

இந்த ஒன்பது கோள்களையும் நட்சத்திரங்களாக சூரியன்களாகக் காண்கின்றபோது எனது உள்ளம் அவைகள் எல்லாம் நியதி தவறாமல் ஆடும் நடனக்காட்சியைப் போன்று உவப்பை அளிக்கிறது.

இறைவா நீயே உனது துண்டுபட்ட பகுதி நிலையில், பேரியக்க மண்டலத்தில் இயங்கும் பொருட்கள் எல்லாமாக இருப்பதால், உனது தன்மை அனைத்தும் ஒவ்வொன்றிலும் அமைந்துள்ளதால் நீயே எல்லாவற்றையும் நியதி தவறாமல் இயக்கி வருகிறாய்.

இந்தஉண்மைகளை உணர்ந்து, அதில் லயமாகின்ற மனநிலையே எனக்கு உயர்ந்த தவமாக அமைகின்றது.

## 11. உருகிப் பெருகும் உள்ளத்தைத் தா!

சுவாமி விவேகானந்தர் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறார். உணவிற்குக்கூட வழியின்றித் தவித்தார். தான் மிகவும் கஷ்டப்படுவதாக ஸ்ரீராமகிருஷ்ணரிடம் சொன்னார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் விவேகானந்தரை, தேவியிடம் போய் வேண்டும் என்றார். சுவாமிஜியும் காளிதேவியிடம் போய் நின்றார்.

ஆனால் பொருள் கொடு, பணம் கொடு என ஒன்றும் கேட்கவில்லை. விவேக, வைராக்கியத்தைக் கொடு, ஞானமும் பக்தியும் கொடு என வேண்டிவிட்டு வந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் வந்தபோது, அட, பொருளையும் பணத்தையும் கேட்க மறந்துவிட்டாயா? லோகமாதாவிடம் மீண்டும் போய் கேள் என்றார். இரண்டாம், மூன்றாம் முறையும் பக்தியையும் ஞானத்தையுமே கேட்டார் சுவாமிஜி.

பாரதியார் வீட்டிலும் பட்டினி. என்றைக்கோ ஒரு நாள் அரிசி கிடைத்தது. அதைக் கொண்டு போய் குருவிகளுக்குப் போட்டுவிட்டு, காக்கை குருவி எங்கள் ஜாதி என்று பாடினார் அவர்.

விவேகானந்தரைப் போலவே பாரதியாரும் இறைவனிடம் என்ன கேட்டு பிரார்த்திக்கிறார் தெரியுமா?

பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்.
  கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்
மண் மீதுள்ள மக்கள், பறவைகள்,
  விலகுங்கள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்
யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே
  இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும், தேவ தேவா!
  ஞான ஆகாசத்து நடுவே நின்று நான்
பூமண்டலத்தில் அன்பும் பொறையும்
  விளங்குக, துன்பதும் இடிமையும் நோவும்
சாவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிரெல்லாம்
  இன்புற்று வாழ்க, என்பேன்! இதை நீ

திருச்செவிகொண்டு திருஉளம் இரங்கி
  அங்ஙனமே ஆகுக என்பாய்!” (பாரதி.பா. )

என வேண்டினார்.

புற்பூண்டு, பூச்சிகள், விலங்குகள், பறவைகள், மக்கள் யாவரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காக இறைவனை வேண்டினார் பாரதியார்.

”உள்ளத்தால் உணர்ந்து உருகி, உன்னை அறியும் அறிவு பெருகுமாறு அருள் தருக” என இப்பாடலில் மாணிக்கவாசகர் பிரார்த்தனை செய்கிறார்.

”மானேோர் பங்கா வந்திப்பார்
  மதுரக் கனியே மனம்நெகா
நானோர் தோளாச் சுரை ஒத்தால்
  நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனை உணர்ந்தே
  உருகிப் பெருகும் உள்ளத்தைக்
கோனே அருளும் காலந்தான்
  கொடியேற்கு அன்றோ கூடிவதே.” (திருவாச.பா.494)

மான் போன்ற பார்வை உடைய உமையின் பாகனே! இனிய கனியே!

மனம் நெகிழாத நான் உள்ளீடு அகற்றப்படாத பயனற்ற சுரைக்குடக்கை போல் இருக்கிறேன்.
அண்ணலே! இதனால் நீ பெரிதும் வாழ்ந்து விட்டாய் போலும்!

தலைவனே! என் உடம்பை இடமாகக் கொண்ட உன்னை, உள்ளத்தால் உணர்ந்து உருகி, உன்னை அறியும் அறிவு பெருகுமாறு அருள் செய்யும் காலம், கொடியனாகிய எனக்கு என்று கைகூடும்?

உள்ளம் உருகி உருகி பிரார்த்தனை செய்தால் மெய்யுணர்வு என்ற பெரும் பதம் கிடைக்கும் என்கிறது வேதாத்திரியம்.

”உய்யும் வகைதேடி உள்ளம் உருகி நின்றேன்.
  உயர்ஞான தீட்சை யினால் உள்ளொடுங்கி,
மெய்யுணர்வு என்றபெரும் பதம் அடைந்தேன்.
  மேல்நிலையில் மனம் நிலைத்து நிற்க நிற்க,
ஐயுணர்வும் ஒன்றாகி அறிவு அறிந்தேன்.
  ஆசையென்ற வேகம் ஆரா யச்சி யா சசு.
செய்தொழில்களில் கடமை உணர்வு பெற்றேன்.
  சிந்தனையில் ஆழ்ந்துபல விளக்கம் கணடேன்.” (ஞாக.பா.9)

வாழ்வின் நோக்கம் தெரியாமல், பிறவியின் நோக்கம் புரியாமல் தடுமாறி வாழ்ந்து வந்தேன்.

இரவும் பகலும் விடைகாண சிந்தித்து உருக்கமான மனநிலையில், வாழ்வின் வகை தேடினேன்.

குருவின் மூலம் ஞானதீட்சை பெற்றதன்பின், மனம் ஒடுங்கி அறிவு என்ற நிலைக்குப் போகும் போது, உண்மை உணர்வு கிட்டியது.

மனம் விரிந்த நிலையையில் பழகப்பழக ஐம்புலன் உணர்வுகளாகிய அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்னும் ஐயுணர்வும் ஒரே உணர்வாகியதால், மன அலைச்சுழல் வேகம் குறைந்தது.

மனதின் அடித்தளம் அல்லது மனதின் மறுமுனை அறிவு என்ற நிலையை அறிந்தேன். நிலையில் அறிவாக இருப்பதே அலையில் மனமுமாக இருக்கிறது.

மனம் என்ற வகையில் செயல்படும்போது இன்ப துன்ப விளைவாக வருகிறது. மீண்டும் மீண்டும் அதே வகையில் செயல்படுகிறோம்.

மனம் கடந்தால் இன்ப துன்பம் என்ற இரட்டைகளில்லை. அது அமைதி நிலை.

அந்நிலையில் உலகியல் தேகைளின்பால் ஏற்பட்ட இச் செய்கைகளை யெல்லாம் ஆராய்ச்சி செய்ய முடிந்தது.

எது தேவை? தேவையில்லை என்ற ஆராய்ச்சியில், விளைவு துன்பம் தருமேயானால் அந்த ஆசை தேவையில்லை என்று முடிவெடுத்தபோது நிறைமனம் கிட்டியது.

அதனால் செய்யக்கூடிய செயல்களையெல்லாம் கடமைக்காக கடமை செய்தல் என்ற வகையில் செய்தபோது, மனநிறைவு, அமைதி, மகிச்சியினால் சிந்தனை தூய்   ணடப்பெற்று மேலும் மேலும் வாழ்வியல் விளக்கங்கள் கிட்டியது.

இறைநிலையை குரு என்பார்கள். அந்த இறை இணைப்பால்தான் வாழ்வியல் விளக்கங்கள் கிட்டமுடியும்.

## 12. ஆனந்தமாய் வாழ ஆசையா?

எல்லாரும் ஆனந்தமாக வாழவேண்டும் என்று மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷழயும் விரும்பினார்கள். விரும்பியதை திருவாசகமாகவும் வேதாத்திரியமாகவும் தந்தார்கள்.

யாருக்குத்தான் ஆனந்தமாய் வாழ ஆசை இருக்காது? ஆனால் எப்படி ஆனந்தமாய் வாழ்வது என்பது தான் தெரிய வில்லை.

ஆனந்தம் ஆர்ப்பரிக்கும் நிமிடங்களை விட்டுவிட்டுக் கவலைகளின் சவலைப் பிள்ளைகளாய், வருத்தத்தின் நிறுத்தத்தில் சிற்றின்ப எல்லையில் நின்றுகொண்டிருக்கிறோமே ஏன்?

நிம்மதியான மனமே ஆனந்தத்தின் சந்நிதி; ஆனந்தமனம் இறைவன் உறையும் அரூபீடம்

எண்ணங்களை ஆராய்ந்த மனமே உற்சாகமாக இருக்கிறது. எண்ணங்களில் தான் இருக்கின்றன நம் வாழ்வின் நிறைவும் ,சந்தோஷமும், சோகத்தின் சரிவும்.

தன்னை அறிவதில்தான் ஆனந்தம். தன்னை அறியும் வழிகைகளைக் காட்டுகிறது திருவாசகமும் வேதாத்திரியமும்.

நிறைவான மனம், வீடு நிறைக்கும் பொருட்களால் ஆனந்தம் வரப்போவதில்லை; பைநிறைக்கும் பணக்கட்டுகள் ஆனந்தம் தரப்போவதில்லை;

கழுத்து நிறைய ஆபரணங்கள் ஆனந்தம் தரப்போவதில்லை. நிறைவான மனமே ஆனந்தத்தின் ஆபரணம்.

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. பணத்திற்காக ஓடியோடி பிணமாய் அடங்குவதைவிட உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்வோமே!

ஆசையை சீரமைத்துக் கொண்ட மனமே ஆனந்தத்தை அடைகிறது. ஆனந்தத்தை அனுபவிக்கிறது.

செய்யும் வேலையை ஒழுங்குடனும் மகிழ்வாகவும் நிறைவாகவும் செய்வதும் தியானம் என்று உணருங்கள். கர்மயோகமே தியானம்.

சினச்சொற்கள் சிராய்ப்பை உண்டாக்கி, முகம்தெரியா மனிதர்களோடும் வீண் பகையை உண்டாக்கிவிடும்.

எனவே கந்தகச் சொற்களை விடுத்து கனிவுதரும் கனிச்சொற்களைப் பேசுங்கள்.

இதைத்தான் ”பேசா இடும்பைகள் பேசித் திரிந்தேன்” என்று தாயுமானவர் நம்மை உஷார் படுத்துகிறார்.

ஆயுள் முழுக்க வயிற்றுக்கு உருண்டு உருண்டு உழைத்தாலும் தினமும் ஒருமணி நேரமாவது மனதிற்காகச் செலவிடுங்கள்.

வானொலி கேளுங்கள், புத்தகம் படியுங்கள், சொற்பொழிவு கேளுங்கள், சிற்பம் பாருங்கள், பாயிரம் பாடுங்கள்,


சிரிக்கப் பேசுங்கள், பறவையைக் காணுங்கள், பறப்பதாய் உணருங்கள். மனம் விட்டுப் பேசும்போது ரணம் விட்டுப்போய்விடும்

இதையும் தாண்டி சும்மா இருந்து பாருங்கள். மௌனமாக இருந்து பாருங்கள். நான் யார்? உங்களைக் கேட்டுப் பாருங்கள். உங்களுக்குள் இருக்கும் பிரம்மத்தை உணர்வீர்கள்.

தேடலோடு தெருவிலிறங்குங்கள், வியப்பைத் தேக்கிய விழிகளில்தான் விந்தைக் காட்சிகள் விரைவாய் தெரியும்.

ஆனால் அத்தனை மகிழ்ச்சியையும் தொலைக்காட்சி தின்று செரித்து நின்று சிரித்துக் கொண்டிருக்கிறதே..பார்க்கும்நேரம் குறைத்து குடும்பத்தாருடன் பேசும்நேரம் அதிகரித்துப் பாருங்கள்.

சீரியல் ஓடாமலேயே ஆனந்தம் ஆறாக ஓடும் நம் இல்லத்திலும் நம் உள்ளத்திலும்.



அதைவிட புஜை அறையில் அமர்ந்து இறைசிந்தனையில் மூழ்குங்கள். அங்கு குடும்ப உறுப்பினர்களுடன் சத்சங்கம் செய்யுங்கள். உங்கள் இல்லத்தில் ஆனந்தம் ஆனந்தமிடும்.

ஆனந்த ஆலயம் - இந்த உலகம் ஆனந்த ஆலயம்; அதில் வசிக்க வந்த நாம் அதை ஒருபோதும் ரசிப்பதில்லை. ஆனந்த அமுதத்தைப் புசித்ததில்லை.

குறை காண்பதற்கே நம்குறைவான வாழ்நாட்களைச் செலவழித்துவிட்டுத் திரும்பிப் பார்க்கும்போது வெறுமை ஒன்றே அருமையாகத் தெரிகிறது.

தாயின் கதகதப்பான சூட்டில் நிம்மதியாகக் கண்ணயர்ந்து தூங்கிய குழந்தைகளாய் நம் வாழ்வைத் தொடங்கிய நாம், வளரவளரச் சக்கரங்கள் மாட்டிய சக்கரவர்த்திகளாய் மாறியது காலச்சோகம்

காசுக்காகவும் வயிற்றுப் பிழைப்பிற்காகவும் ஓடத்தொடங்கி, ஓட்டத்தை நிறுத்தி வாழப் பார்க்கும்போது வாழ்க்கை முடிய இருக்கும் முன்னறிவிப்பு வருவது

எத்தனைத் துயரமானது. எல்லோரையும் திருப்திப்படுத்திவிட்டு நமக்காக நாம் வாழத்தொடங்கும்போது நம்மைவிட்டு எல்லாம்



தொலைதூரம் போய்விட்ட காட்சியைக்காண்பது எத்தனைத் துயரமானது.

ஆனந்த நிமிடங்களை ஆராதிப்போம். அன்றன்றே. அட்டையை உரசியவுடன் இயந்திரத்திலிருந்து வருவதற்கு ஆனந்தம் ஒன்றும் புன்னகை பூதமல்ல.

அது நம் மனதில் உள்ளது, மலராய் உள்ளது, உள்ளத்தில் உள்ளது, உள்ளுக்குள் உள்ளது. இந்த நிமிடத்திலிருந்து நமக்காக வாழத்தொடங்குவோம் ஆனந்தமாக!-

நமக்காக வாழத் தொடங்குவதற்கும், ஆனந்தத்தை அடைவதற்கும் அருமையான வழிகாட்டியாக அமைந்திருக்கிறது திருவாசகமும் வேதாத்திரியமும்.

”கூடிக்கூடி உன் அடியார்
  குளிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடிவாடி வழியற்றேன்
  வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடிஊடி உடையாயொடு
  கலந்து உள் உருகிப் பெருகிநெக்கு
ஆடிஆடி ஆனந்தம்
  அதுவே யாக அருள்கலந்தே.” (திருவாச.பா.495)

உன்னுடைய அடியார்கள் பலமுறையும் கூடி நின்று கூத்தாடி. சிரித்து, இறுமாந்து, நிற்கவும், நானோ, பல முறையும் மனம் வாட்டமுற்று, உலர்ந்த மரம் போல் நிற்பதா?

என்னை ஆண்டு கொண்டவனே! உன்னுடன் கலந்து. உள்ளம் உருகி, பெரிதும் நெகிழ்ந்து, பலமுறை ஆனந்தக் கூத்து ஆடியும், இன்பம் பெற்று அருளில் கலந்து பலமுறை ஊடல் கொள்ளவும், ஆக இப்படி எனக்கு அருள் செய்வாயாக!

இன்ப ஊற்று உள்ளத்தில் எப்போது ஊறத்தொடங்கும்? வேதாத்திரியம் சொல்கிறது.

”நீ எங்கு எவ்விடத்தில் இருக்கிறாய் என்று கணித்துக் கொள்ள வேண்டும். அதாவது வயதிலே வாழ்விலே, கல்வியிலே, செயல் திறமையிலே, அறிவின் நுட்பத்திலே பொருள் வளத்திலே, அதிகாரத்திலே, எந்த நிலையிலே நீ இருக்கிறாய் என்று கணித்துக் கொள்.

இவற்றைக் கொண்டு உனக்கு, குடும்பத்துக்கு. சுற்றத்தாருக்கு, ஊருக்கு, உலகுக்கு என்ன நன்மை செய்ய முடியும் என்று கணித்துக் கொள், முடிந்த அளவிலே செய்து கொண்டிரு.

இந்தத் தொண்டினை ஆற்றுவதற்கு என் திறமையை எந்தெந்த முறையில் வளர்த்துக் கொள்ள முடியுமென்று திட்டமிட்டு முறைான பயிற்சியின் மூலம் வளர்த்துக்கொள்.

இங்கே ஒரு பெரிய இன்ப ஊற்று உள்ளத்திலே ஊறத் தொடங்கி விடும்."என்கிறார் வேதாத்திரி மகரிசி.

பேரின்பம் எப்படி இருக்கும் தெரியுமா? வேதாத்திரியார் பேரின்பக் களிப்பில் பாடுகிறார்.

இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா - எங்கும்
இன்ப ஊற்றாய்ப் பெருகும் இறைவா!
அன்பு ஊற்றாய்ப் பெருகி அனைத்துயிர்க்குள்ளும் அறிவாய்
இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா (ஞா.க.பா.1648-1)

அதைவிடப் பெரிய இன்பம் இல்லை என்பதைக் குறிக்க பேரின்பம் என்கிறோம்.

ஊற்று என்பது குறைவில்லாமல் தொடர்ந்து வந்து கொண்டேயிருப்பது. இன்பமானது நீடித்தும் நிலைத்தும் இருப்பது ஆகும். இன்பமும் துன்பமும் இல்லாத நிலையே அமைதி.




மன அலைச் சுழலானது குறைந்து அறிவு என்ற நிலைக்குப் புகும்போது, தன்னையே எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் தனக்குள்ளேயும் காண்கின்ற அகத்துணர்வு ஏற்படும். அதுவே பேரின்பம், பேரானந்த நிலையாகும்.

அறிவாய் இருக்கும் அறிவாய் இயங்கும் பாரபரத்தை பற்றினால் பேரின்பத்தை அடையலாம் என்கிறார் வேதாத்திரியார்.

எழிலுலகம் படைத்து எல்லா உயிர்களுக்கும்
வழிவழியாக வாழ வாய்ப்பை நிரப்பி வைத்து

ஒழிவிலாத் தொடராக உள்ளும் புறமும் ஊற்றாய்
அழிவிலாப் பேரின்ப அறிவலையாய்த் திகழும், (ஞா.க.பா.1646-2)

இன்ப ஊற்றாக எங்குமே நிறைந்த இறைநிலை, அனைத்து சீவ இனங்களிலும் அன்பு ம கருணையும் வெளிப்படுத்தும் அறிவாக இயங்குகிறது.

பரம் என்றால் அதைவிடப் பெரிதும் நுண்ணியதும் இல்லை. இணையானதுமில்லை என்பதாகும். அதனையே பேரறிவு என்கிறோம்.

ஆதிநிலை வெளியில், அறிவும் விரைவுமாக
அடங்கியுள்ள தன்மையே அணுமுதல் அனைத்துக்குள்ளும் நீதி ஒழுங்கமைப்பாய், நேர்முகக் காட்சிகளாய்,
நிறைந்த திருவருளை நினைக்க நினைக்க என்னுள் (ஞா.க.பா.1648-3)

ஆதி, அனாதி, சுத்தவெளி எனப்படும் இறைநிலையானது இயக்க ஒழுங்கோடு தோற்றங்களாகி, அனைத்திற்குள்ளும் வேகமாகவும், விவேகமாகவும் இருந்து, நியதி தவறாமல் இயக்கியும், காத்தும் முடித்தும் வைக்கிறது என்பதை நேரடிக் காட்சியாக அகத்துணர்வாக உணர்ந்தேன்.

அந்தக் காட்சியை எண்ணுகிறபோது, எனக்குள்ளும் புறமுமாக அன்பு ஊற்றாக இன்ப ஊற்றாக இறைநிலையை உணர்கிறேன் என்று பாடுகிறார் வேதாத்திரியார்.

உடலும்- நிலையாமை தத்துவத்தில்அடங்கியுள்ளது. உலகமும்- நிலையாமை தத்துவத்தில் அடங்கியுள்ளது. இதனை பேரின்பக் ஊற்றில் பாடுகிறார் வேதாத்திரியார்.

உடலாய் எனை நினைந்தேன் உணர்ச்சிகள் வருந்தின
உடலுள் உயிராய் என்னை உணர்ந்து அறிவில் நிறைந்தேன்
உடலுயிர் ஊடறிவாய் உன்னை உணர்ந்தபோது
உடலுயிர் அறிவு நீயாய் உணர்ந்துன்னுள் நான் அடங்க(ஞா.க.பா.1646-4)

அழிந்து போகக்கூடிய உடலையே நான் என்று கருதியபோது உணர்ச்சிவயப்பட்ட நிலையில; துன்புற்றேன்.

உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு. அந்த அறிவே நானாகவும், நீயாகவும் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

தீய கர்மம் புகாமல் கண்ணும் கருத்துமாக இருந்தால் உலக மக்கள் எள்ளி நகையாட மாட்டார்கள். இறைநிலையும் நம்மை அலையவிடாது என்கிறார் வேதாத்திரியார்.

உண்மை நிலை மறந்து உணர்வு தன்முனைப்பாகி
எண்ணம் 'தான்' 'தனது' என்று இறுகிக் குறுகி நின்று
மண்ணைப் பொன்னை மென்மேலும் மாறிமாறி நினைந்து
கண்ணும் கருத்தும் தீய காமம் புகாமல் என்னுள் (ஞா.க.பா.1646-3)

பிரபஞ்சமமாகி எண்ணிடலடங்காத கோள்களிலே, நில உலகமும்,சீவ இனங்களுமாகி தொடர்ந்து வழிவழியாக வாழ்வதற்கு வாய்ப்புகளையும் நிரப்பி வைத்து. ஓய்வு இல்லாமல், அகமும் புறமுமாக, அழிவில்லாத பேரறிவாக எல்லாவற்றிலும் இருந்து, இயக்கி, காத்து, முடித்தும் வைக்கிறது.

இந்த உண்மைகளை எல்லாம் மறந்து மயக்க நிலையில் தன்முனைப்பின் காரணமாக அழிந்து போகக்கூடிய உலகியில் விஷயங்களையே நினைந்து, பற்றுக் கொள்ளக்கூடிய தீய வினைப்பதிவுகள் என்னுள் புகுந்துவிடாமல், இறைவா நீ காப்பாயாக.

உணர்ச்சி நிலையிலிருந்து அறிவு நிலைக்கு உயர்ந்தால் இறைநிலையை உணரலாம் என்கிறது வேதாத்திரியாரின் ஞானக்களஞ்சியம்.

உணர்ச்சியாய்ச் சிந்தனையாய் உள்ளதே அறிவென்று,
உணர்ந்திருந்தேன் பலநாள், மேலும் உண்மை விளங்க
உணர்ச்சிக்கு முன்னம் விண்ணில் ஒழுங்காற்றலாய் விளங்கும்,
உனது திருநிலையும் அறிவே என உணர்ந்தேன். (ஞா.க.பா.1648-2)

பலநாட்கள் உடல் உணர்ச்சிகளையும், எண்ணங்களையுமே அறிவு என்று கருதியிருந்தேன்.
உணர்ச்சிக்கு முன்நிலையாகிய உயிர் என்னும் விணணின் இயக்க ஒழங்கே அறிவு என்பதையும் நீயும் அறிவுதான் என்பதையும் உணர்ந்தேன் என்கிறார் பேரின்ப ஊற்றில்...வேதாத்திரியார்.

சுகாதீத இன்ப நிலையத்திற்கு, துரியாதீத நிலைக்கு செல்லும் நிலையை வேதாத்திரியார் துல்லியமாக காட்டுகிறார்.

பரம அணு முதலாய்ப் பார். விண்மீன் அனைத்தும்,
பம்பரம் போல் சுழன்று, மிதந்துருண்டு உன்னில்
தரம் அறிவே என்னும் தத்துவம் உணர்ந்திட்டேன்!
தற்பரனாக, உன்னை என்னுள் உணரப்பெற்றேன்! (ஞா.க.பா.1648-4)

பரம் என்றால் அதைவிடப் பெரியதோ, நுண்ணியதோ இல்லை என்பதாகும். பரத்தின் அசைவில் தோன்றியது பரம அணு.

பரம அணுக்களின் கூட்டு விண்கள். விணகளின் கூட்டு பஞ்சபூதங்கள். பஞ்சபூதங்களின் கூட்டு விண்மீன் எனப்படும் கோள்.

கோள்கள் ஒவ்வொன்றும் பம்பரம் சுழல்வது போல, தற்சுழற்சி கொண்டு, பரம் என்னும் சுத்த வெளிக்குள்ளாகவே மிதந்து கொண்டும், உருண்டு கொண்டும் இயங்குகின்றன.

அந்த இயக்கங்களுக்கொல்லாம், சுத்தவெளியின் தரமாகிய அறிவுதான் காரணம் என்ற தத்துவத்தையும் உணர்ந்து விட்டேன்.

தானே பரமாக உணர்வது தற்பரம் ஆகும். மேன்மையான உன்னையே எனக்குள்ளாகவும் உணர்ந்து தற்பரனானேன்.

இன்பம் பெறுவது எப்படி என்றும் ஆனந்தம் நிலைத்திருக்க என்ன செய்ய வேண்டும் எனக் கேட்கும் மாணிக்கவாசகருக்கு இன்ப ஊற்றில் விடையைப் பார்க்கலாம்.

ஆதிநிலை வெளியில், அறிவும் விரைவுமாக
அடங்கியுள்ள தன்மையே அணுமுதல் அனைத்துக்குள்ளும்
நீதி ஒழுங்கமைப்பாய், நேர்முகக் காட்சிகளாய்,
நிறைந்த திருவருளை நினைக்க நினைக்க என்னுள் (ஞா.க.பா.1648-3)

ஆதி, அநாதி, சுத்தவெளி எனப்படும் இறைநிலையானது இயக்க ஒழுங்கோடு தோற்றங்களாகி,,,,
அனைத்திற்குள்ளும் வேகமாகவும், விவேகமாகவும் இருந்து, நியதி தவறாமல் இயக்கியும் காத்தும் முடித்தும் வைக்கிறது என்பதை நேரடிக் காட்சியாக அகத்துணர்வாக உணர்ந்தேன்.
அந்தக் காட்சியை எண்ணுகிறபோது, எனக்குள்ளும் புறமுகமாக அன்பு ஊற்றாக இன்ப ஊற்றாக இறைநிலையை உணர்கிறேன் என்கிறார் வேதாத்திரியார்.

இறைவன் எழுந்திருக்கும் இடம் என்பது எது என்பதை தாயுமானவரின் கேள்விக்கு விடையாக வருகிறார் வேதாத்திரியார்.

"உன்னிலே நானடங்க, என்னுளே நீ விளங்க,

உனது தன்மை ஒளிர, எனதுள்ளம் தூய்மை பெற்றேன்" (ஞாக.பா. 1648-5)

சுத்தவெளியே தன் நிலையையில் மாற்றம் பெற்று, எல்லாத் தோற்றங்களுமாகியிருக்கிறது என்பதை ஆத்மானுபவமாக

உணர்ந்போது, உனக்குள்ளாக நான் அடங்கியிருக்க, எனக்குள்ளே நீ அறிவாக விளங்குவதை உணர்ந்தேன்.

உனது தெய்வீகத் தன்மையானது எனது அறிவைத் தெளிவுபடுத்தியதால், உள்ளத்தூய்மை பெற்றுவிட்டேன்.

மனிதன் அடைய வேண்டிய பெரும் பேற்றினைப் பெற்றுவிட்டேன்.

இனி எனக்கு என்ன வேண்டும்? மனிதப் பிறப்பும் எடுத்த நோக்கம் நிறைவுற்று முழுமை பெற்றேன் என்கிறது பேரின்ப ஊற்று.

மாணிக்கவாசகரைப் போல் வேதாத்திரியாரும் பேரின்ப ஊற்றில்....."உடலாய் என்னை நினைத்தேன்" என வருந்துவதைக் காணலாம்...

ஆனால் "உடலுயிர் அறிவு நீயாய், உணர்ந்துன்னுள் நான் அடங்க" என்று விளக்கம் பெற்று சரியான பாதையில் மானுடத்தை அழைத்துச் செல்கிறார்.

"உடலாய் எனை நினைந்தேன் உணர்ச்சிகள் வருந்தின
உடலுள் உயிராய் என்னை உயர்ந்து அறிவில் நிறைந்தேன்
உடலுயிர் ஊடறிவாய் உன்னை உணர்ந்தபோது
உடலுயிர் அறிவு நீயாய் உணர்ந்துன்னுள்நான் அடங்க" (ஞா.க.பா.1646-4)

அழிந்து போகக்கூடிய உடலையே நான் என்று கருதியபோது உணர்ச்சிவயப்பட்ட நிலையில் துன்புற்றேன.

உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு. அந்த அறிவே நானாகவும், நீயாகவும் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

மாணிக்கவாசகரைப் போல் வேதாத்திரி மகரிசியும் பேரின்பக் ஊற்றில் பாடுகிறார்....

வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூய்மை பெறவே
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே
எனை மறந்தேன் என்றன் வினை மறந்தேன் இறைவா !
எனை மறந்தேன் ஆனால் நீ உள் நிறைந்து எனை மீட்டு.(ஞாக. பா.1646-5)

கர்ம வினைப் பதிவுகளைக் கழித்து ஆன்மாவைத் தூய்மை செய்து கொள்வதற்காகவே உடலெடுத்து நில உலகில் வாழ்ந்து கொண்டுள்ளேன்.

பிறவியின் நோக்கத்தையும் என் வினைகளையும், உன் பெருமையையும் மறந்துவிட்டேன். ஆனால் நீ என்னுள்ளே அறிவாக நிறைந்து வழி நடத்துவாயாக.

மண் என்ற நிலம் மீது பெண் துணைகொண்டு பொருளை கொண்டு வாழ்க்கை வாழ்ந்து வரும் மனிதனாவன், அந்த பொருள்களிலிருந்து பெறுகின்ற அனுபோகமே இன்பம் என்றும்…

அதுவே பொருள் என்ற மயக்கநிலையில் மதி மயங்கி வாழும் மனிதனின் அறிவு நிலையை உயர்த்தி மெய்ப்பொருள் ஒன்றே உண்மைப் பொருள். இப்பிரபஞ்சத்தில் உள்ள அனை த்த தோற்றங்களும் நிகழ்ச்சியே என்ற அயரா விழிப்பு நிலையில் தாமரை இலை தண்ணீர்போல,,,,

உறவிலே கண்ட உண்மைநிலைத் தெளிவே துறவு என்ற நிலையில் காணும்பொழுது…..

மெய்ப்பொருள் நிலை மறவாது மூன்று தோற்றங்களிலிருந்து அனுபோகமாக எவன் ஒருவன் இன்பத்தை பெறுகின்றானோ….

அதுவே அவனது நிலைத்த, நீடித்த மகிழ்ச்சியான, நிலையான இன்பமாகிய பேரின்பம் ஆகும்.

”பொருளல்லவற்றை பொருளாக கொள்ளும்

மருளானம் மான பிறப்பு”

என்கிறார் வள்ளுவர். அதன்வழி வேதாத்திரி மகரிஷி அவர்களும் மெய்ப்பொருள் என்று நமக்கு உணாத்துகிறார்.

”ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குகின்ற

அறிவின் உயர்நிலையே பேரின்பம்”

## பேரின்பத்தின் இறுதி இலக்கு

மெய்ஞ்ஞானத்தின் அடிப்படை ‘தன்னையறிதல்’. தன்னையறியும் முயற்சியில் ஈடுபடுபவர் தான் பேரின்பத்தின் இறுதி இலக்கான இறைவனை அடைய முடியும்.

அந்த நிகழ்முறையில், இவ்வுலக ஆசைகளை விட்டொழித்து, நிலையாமையை உணர்ந்து, இறை வழிபாட்டில் தன்னைக் கரைத்துக் கொள்வதே ஞானநெறியாகும்.

இருவருமே ஞானநெறியில் ஈடுபட்டு, ஆனந்தக் கடலில், பேரின்ப ஊற்றில் அடைந்தனர்.

# துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி
6. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
7. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
8. பாரதியார் பாடல்கள், பாரதியார்
9. சுகவாரியும் பேரின்ப ஊற்றும், மன்னார்குடி பானுகுமார். இணையதளம்
10. ஆனந்த களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.